வானவில்

VAANAVIL

இதழ் 150 | ஆனி 2023

ISSUE 150 | JUNE 2023


# இனப்பிரச்சினையை இடதுசாரிகள் கையில் எடுக்க வேண்டும்!



இலங்கையில் இன முரண்பாட்டால் எழுந்த யுத்தம் 2009 மே மாதத்தில் முடிவுக்கு வந்துவிட்டது. யுத்தம் முடிந்துவிட்டதால் இனப்பிரச்சினையும் முடிந்துவிட்டது என்பது அதன் அர்த்தம் அல்ல. யுத்தம் முடிவுக்கு வந்தாலும் இனப்பிரச்சினை இன்னமும் நீறுபூத்த நெருப்பாகத்தான் இருந்து வருகிறது.

சுதந்திரத்துக்குப் பின்னர் தொடர்ந்து சிங்களப் பேரினவாதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வரும் இலங்கை அரசுக்கும், தமிழின விடுதலை என்ற பெயரில் தமது பாசிச அதிகாரத்தைத் தமிழ் மக்களின் மேல் திணிப்பதற்கு முயன்ற புலிகள் இயக்கத்துக்கும் இடையில் நடந்த அழிவுகரமான யுத்தமே முடிவுக்கு வந்துள்ளது. இந்த அழிவுகரமான யுத்தம் ஏதோவொரு வகையில் முடிவுக்கு வந்தது நல்லதே என்ற போதிலும், அதன் காரணமாக தமிழ் மக்களின் தேசிய உரிமைக்கான போராட்டமும் முடிந்துவிட்டது என்பதோ, பேரினவாத சக்திகள் தமது நடவடிக்கைகளை இனித் தங்குதடையின்றித் தொடரலாம் என்பதோ இதன் அர்த்தம் அல்ல.

இலங்கையில் இனப்பிரச்சினை தோன்றிய வரலாற்றை எடுத்துப் பார்ப்போமானால், அதற்கு காலகோள் இட்டவர்கள் இலங்கையை சுமார் 200 ஆண்டுகள் ஆட்சி செய்த பிரித்தானிய காலனித்துவவாதிகளே. “பிரித்து ஆள்வது” என்பதே அவர்களது கொள்கையாக இருந்தது. எனவே, அவர்கள் தமது காலனித்துவ நாடுகளில் தமது அதிகாரத்தைத் தொடர்வதற்காக இந்தக் கொள்கையை எங்கும் நடைமுறைப்படுத்தினார்கள். அதனால்தான் அவர்கள் 1948 இல் நாட்டை விட்டுப் போகும்போது சிறுபான்மை இனங்களுக்கு அதிகாரப் பகிர்வு ஏற்பாடு எதனையும் செய்யாமல் அவர்களை அநாதரவாக விட்டுவிட்டுப் போனார்கள்.

பிரித்தானியர் செய்துவிட்டுப் போன இந்தச் செயல் 1948 இல் ஆட்சிக்கு வந்த டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான சிங்களப் பேரினவாத ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு வாய்ப்பாகப் போய்விட்டது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய அந்த அரசு தமிழ் மேட்டுக்குடி வர்க்கத்தினரின் கட்சியான ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியையும் சேர்த்துக் கொண்டு, வடக்கு கிழக்கில் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்ததுடன், இந்திய வம்சாவழி மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையையும் பறித்தெடுத்தது.

சுதந்திர இலங்கையின் முதலாவது அரசான ஐ.தே.க. அரசு ஆரம்பித்து வைத்த இந்த சிங்களப் பேரினவாத நடவடிக்கையை அதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அத்தனை அரசுகளும்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# இந்துத்துவம் நிறுவிய செங்கோல்

**கா**ந்தியை சுட்டுக்கொன்ற கோட்சேயின் குரு சாவர்க்காரின் பிறந்ததினமான மே 28ஆம் திகதி அன்று இந்தியாவின் புதிய பாராளுமன்றக்கட்டிடத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்துள்ளார். இத்திறப்பு விழாவின் போது பாராளுமன்றத்தின் சபாநாயகரின் இருக்கைக்கு அருகில் ஐந்தடி உயரத்தைக் கொண்ட செங்கோலொன்றும் பிரதமரால் நிறுவப்பட்டது.

இந்தியாவின் பழைய பாராளுமன்றக் கட்டிடம் 1927 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்த கட்டிடத்தில் தற்போதைய தேவைகளுக்கேற்ப போதுமான இடவசதி இல்லையெனக் கூறி, புதிய பாராளுமன்றத்தைக் கட்டுமாறு பாரதிய ஜனதாக்கட்சியை பெரும்பான்மையாகக் கொண்டிருந்த மக்களவை மற்றும் மாநிலங்களவையால் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்து, புதிய பாராளுமன்றக் கட்டிடத்தைக் கட்ட முடிவு செய்த மத்திய அரசு, அதற்கான அடிக்கல்லை தற்போதைய இந்தியப்பிரதமரே 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் திகதி நாட்டினார். இந்த அடிக்கல் நாட்டு விழாவிற்கு, அப்போது குடியரசுத் தலைவராக இருந்த ராம் நாத் கோவிந்த் (Ram Nath Kovind) அழைக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் பாராாளுமன்றத்தை தொடக்கி வைக்கவும் முடித்து வைப்பதற்குமான அதிகாரம் பெற்றவர் குடியரசுத் தலைவர் மாத்திரந்தான். ஆனால் இந்த புதிய பாராளுமன்றத் திறப்பு விழாவிற்கு குடியரசு தலைவர் திரௌபதி முர்முவுக்கு (Droupadi Murmu) அழைப்புக்கூட கொடுக்கப்படவில்லை. இதனால் புதிய பாராளுமன்ற கட்டிடத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைப்பதற்கு எதிர்க்கட்சிகள் கடுமையான கண்டனத்தை தெரிவித்திருந்தார்கள். காங்கிரஸ், இடதுசாரிகள், தி.மு.க., திரிணாமுல், ஜனதாதளம், ஆம் ஆத்மி உட்பட 19 எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டு நின்று புதிய பாராளுமன்றத் திறப்பு நிகழ்வினை பகிஷ்கரிப்பு செய்திருக்கிறார்கள்.

மோடி இப்போது பாராளுமன்றத்தில் நிறுவிய செங்கோல் என்பது மன்னராட்சியை மீளுருவாக்கம் செய்யும் முயற்சி என்றே பலராலும் கருதப்படுகின்றது. செங்கோல் என்பது சோழர் காலத்திற்குரியது. மன்னர்கள் தங்கள் அதிகாரத்தை ஒருவரிடம் இருந்து இன்னொருவரிடம் மாற்றும்போது அதற்கான அடையாள நிகழ்வாக செங்கோலை பரிமாற்றுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். சோழ மன்னர்களின் காலத்தில் பின்பற்றப்பட்ட இந்த வழக்கமானது, இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் இருந்திருக்கின்றது. இதைத்தான் மறுபடியும் இப்போது புதுப்பித்து செங்கோலை புதிய பாராளுமன்றத்தில் நிறுவியிருக்கிறார் மோடி.

மோடியால் தற்போது பாராளுமன்றத்தில் நிறுவப்பட்ட செங்கோலானது, வெள்ளியால் செய்யப்பட்டு தங்க முலாம் பூசப்பட்டுள்ளது. இது இந்தியா சுதந்திரம் பெற்ற நாளான ஒகஸ்ட் 15ஆம் திகதிக்கு முதல்நாள் மாலை, திருவாவடுதுறை ஆதீனத்தால் இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. பின்னர் இத்தனை ஆண்டுகளாக அது அலகாபாத் அருங்காட்சியகத்தில் (Allahabad museum) வைக்கப்பட்டிருந்தது. பிரித்தானியர்களின் ஆட்சி முடிவுக்கு வந்து, காலனித்துவ ஆட்சிக்கு முற்பட்ட மன்னர் ஆட்சியின் நினைவுச்சின்னமாகவே செங்கோல் தனக்கு வழங்கப்பட்டுள்ளதென நேரு கருதியிருந்தால், செங்கோல் அதிகாரச்சின்னமாக பாராளுமன்றத்திலோ அல்லது வேறு அரச மண்டபத்திலோ இருந்திருக்கும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற கையோடு முற்றுப்பெற்ற செங்கோல் விவகாரத்தை, 75 ஆண்டுகள் கழித்து இப்போது மோடி தோண்டியெடுத்திருப்பது, மன்னர் போன்ற கட்டற்ற அதிகாரம் கொண்ட நபராக தன்னை நிலை நிறுத்திக்கொள்வதற்காகவே என்றே தோன்றுகின்றது. அதனாலேயே, மண்டபத்திற்குக் கொண்டு வரப்பட்ட செங்கோலுக்கு திருவாவடுதுறை ஆதீனம் உள்ளிட்ட பல்வேறு சைவ மடங்களைச் சேர்ந்த ஆதீனங்கள் முன்னிலையில் வேத மந்திரங்கள் ஓத, தேவாரங்கள் பாட பூசைகள் செய்யப்பட்டன. மேலும், அனைத்து ஆதீனங்களும் செங்கோலுக்கு புனித நீர் தெளித்தனர், மலர் தூவி மரியாதை செய்தனர். முடிவில், புனித செங்கோல் முன்பாக பிரதமர் நரேந்திர மோடி விழுந்து வணங்கினார்.

செங்கோலானது எப்போதுமே முடியரசின் அதிகாரக் குறியீடாகவே இருக்கிறது. இன்று இந்தியா ஒரு குடியரசு. எனவே இந்த செங்கோலை இந்திய மக்களவையில் சபாநாயகரின் இருக்கைக்கு அருகில் நிறுவுவதென்பது குடியரசின் அடிப்படை அம்சத்தை தகர்ப்பதாகவே உள்ளது. அத்துடன் குடியரசின் ஜனநாயகப் பண்புகளை எதிர்காலத்தில் அழித்துவிடும் சாத்தியத்தையும் இது கொண்டிருக்கின்றது. ஜனநாயக நாடாக இந்தியா தொடர வேண்டுமென்றால், செங்கோலை பாராளுமன்றத்திலிருந்து அகற்றியாக வேண்டும்.

கடந்த 9 ஆண்டுகளாக இந்தியாவின் ஆட்சியில் அமர்ந்திருக்கும், ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் சித்தாந்தத்தைப் பின்பற்றும் பாரதிய ஜனதாக்கட்சியும், பிரதமராக இருக்கும் மோடியும், இந்தியாவை முற்றுமுழுக்க ஓர் இந்துத்துவ நாடாக உருவாக்குவதையே கனவாகக் கொண்டுள்ளனர். இந்துத்துவ அடிப்படை மதவாதிகளால் நடத்தப்படும் ஒரு நாடாக இந்தியா உருமாறினால், ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இரண்டாந்தரக் குடிமக்களாகவே நடத்தப்படுவர். இது ஒரு பேரழிவிற்கே இட்டுச் செல்லும். இந்தப் பேரழிவைத் தடுப்பதற்கான போராட்டத்தை இந்திய மக்கள் ஆங்காங்கே செய்து வருகிறார்கள். 2024 ஆம் ஆண்டுத்தேர்தல் நெருங்கி வருவதால், இப்போராட்டம் தீவிரப்படுத்தப்பட வேண்டும். மக்களின் போராட்டத்தை வழிநடத்துவதற்கு இந்தியாவின் அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும்.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

# ஏகாதிபத்தியமும் இயற்கை வளங்களும்

உலக நாடுகள் அடைந்துள்ள 'வளர்ச்சி' நிலைக்கும், இயற்கை வளங்களின் மீது அவர்கள் கொண்டிருக்கும் கட்டுப்பாட்டிற்கும் இடையில் மிகப்பெரும் அசமத்துவம் நிலவுகிறது. உதாரணமாக, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் மற்றும் கனடா ஆகிய பெரும் வளர்ச்சியடைந்த நாடுகளின் குழுவான ஜி-7 நாடுகளை எடுத்துக்கொள்வோம். இந்த நாடுகளில், உலகத்தின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 10 சதவீதம் மட்டுமே வாழ்கிறார்கள். ஆனால், 2020 ஆண்டு கணக்கில், உலகத்தின் ஒட்டுமொத்த செல்வ வளத்தில் சரிபாதிக்கும் கூடுதலாக தங்கள் வசம் வைத்துள்ளார்கள். ஒட்டுமொத்த உலக உற்பத்தியில் ஐந்தில் இரண்டு பங்கை கொண்டுள்ளார்கள் (இது 32 முதல் 46 சதவீதம் வரை இருக்கும். நான் வசதிக்காக மதிப்பீட்டின் நடுப்பகுதியை எடுத்துக்கொண்டேன்). ஜி-7 நாடுகள் மதிப்பிட முடியாத பொருளாதார வலிமை கொண்டுள்ளன. ஆனால் அந்த நாடுகளில் கிடைக்கும் இயற்கை வளங்களை கணக்கிட்டால், அவை மிகவும் மோசமாக அருளப்பட்டிருப்பது தெரியும்.



Professor Prabhat Patnaik

சமகாலத்தின் மிக முக்கியமான இயற்கை வளங்களான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை எடுத்துக் கொள்வோம். உலகம் முழுவதும் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு இருப்புகளும், நாடுகளிடையே அவற்றின் மதிப்பீடுகளும் ஏறுமாறாக உள்ளன. மதிப்பீடுகளில் காணப்படும் வேறுபாடுகள் அதன் உண்மைத் தன்மையில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பது தெளிவு. அமெரிக்காவின் எரிசக்தி தகவல் மேலாண்மை அமைப்பின் தகவலின்படி உலகில் இதுவரை அறியப்பட்டுள்ள எண்ணெய் இருப்பு விபரங்கள் அடிப்படையில் ஜி-7 நாடுகளில் 13% இருப்பு உள்ளது. அதிலும் சுமார் 10 சதவீதம் இருப்பது கனடா நாட்டில்தான். இந்த கணக்கீட்டில் ஷேல் எண்ணெய் கணக்கு உள்ளடக்கப்படவில்லை. அதை நோக்கி அமெரிக்கா தாமதமாகத்தான் திரும்பியது. பல நாடுகளின் ஷேல் (shale) எண்ணெய் இருப்பு பற்றிய விபரங்கள் முழுமையாக தெரியாது. இருப்பினும், அதையும் உள்ளடக்கினாலும் கூட மேற்சொன்ன புள்ளிவிபரத்தில் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படாது. மிகவும் முன்னேறிய நாடுகளின் எல்லைகளுக்கு வெளியில்தான் அதிகமான எரிசக்தி இருப்புக்கள் உள்ளன.

### பேராசிரியர் பிரபாத் பட்நாயக்

இயற்கை எரிவாயு இருப்புக்களை கணக்கில் எடுத்தால், அதிலும் நாம் இருப்புக்கும் விநியோகத்துக்கும் இடையில் மதிப்பீட்டில் ஏறுமாறான நிலைமையையே பார்க்கிறோம். அமெரிக்காவின் எரிசக்தி தகவல் மேலாண்மை அமைப்பின் தகவலின்படி, 2020 ஆம் ஆண்டின் இறுதி வாக்கில், உலகத்தின் ஒட்டுமொத்த எரிவாயு இருப்பான 188 இலட்சம் கியூபிக் மீட்டர் என்ற அளவில் 8 சதவீதத்திற்கும் சற்று கூடுதலான அளவு மட்டுமே ஜி-7 நாடுகளின் வசம் இருக்கிறது. இதிலும் ஷேல் வாயு இந்த மதிப்பீடுகளிலிருந்து விலக்கப்பட்டுள்ளது, ஆனால் அதை உள்ளடக்கினாலும் கூட, உலக எரிவாயு இருப்புக்களில் பெரும்பகுதி மிகவும் முன்னேறிய நாடுகளுக்கு வெளியே உள்ளது என்ற முடிவிற்கே சந்தேகத்திற்கு இடமின்றி வர முடியும். அந்த நாடுகளில் சில, இந்த எரிபொருட்களை பயன்படுத்துவதில் இருந்து விலகிச் செல்லும் முயற்சிகளை தாமதமாகவேனும் முயற்சித்தன. பிரான்ஸ் நாடு அணுசக்தியை அதிகம் நம்பியிருக்கிறது. காலநிலை மாற்றம் பற்றிய அச்சம் காரணமாக பல்வகை எரிசக்தி மூலங்களை பயன்படுத்திய நகர்வு சற்று துரிதப்பட்டுள்ளது. ஆனாலும், முன்னேறிய நாடுகளின் நம்பிக்கை இப்போதும் கணிசமாக எண்ணெய் மற்றும் எரிவாயுக்களின் மீதே உள்ளது. அவர்களின் நாட்டு எல்லைகளுக்குள் இந்த வளங்கள் மிகவும் குறைவாகவே கிடைக்கின்றன.

### வேளாண் பொருட்களின் இறக்குமதி

வேளாண் சரக்குகளைப் பற்றி நாம் பெரிதாக பேசவில்லை. இந்த விசயத்தில் முன்னேறிய நாடுகளின் திறன் புவியியல் அடிப்படையிலேயே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் நடந்த தொழிற்புரட்சியில் பருத்தித் துணி உற்பத்திதான் தொழிற்புரட்சிக்கும் முதலாளித்துவ உற்பத்திக்கும் முன்னோடியாக இருந்தது. ஆனால், பருத்தியை இங்கிலாந்தில் வளர்க்க முடியாது என்பதால், பருத்தி இறக்குமதியையே அது சார்ந்திருந்தது. அதே போலத்தான் முதலாளித்துவ பெருநகரங்கள் ஒவ்வொன்றுமே. அவை முக்கியமாக உலகின் மிதவெப்பப் பகுதிகளில் அமைந்திருப்பதால், அனைத்து பயிர் வகைகளையும் அங்கேயே வளர்த்துக்கொள்ள முடியாது. அல்லது போதுமான அளவுக்கோ அல்லது ஆண்டு முழுவதுமோ அவற்றை வளர்க்க

முடியாது. மறுபுறம் வெப்ப மண்டல மற்றும் மிதவெப்ப மண்டல பகுதிகள் இந்த பயிர்களை விளைவித்து பெருநகரங்களுக்கு வழங்க முடியும். எனவே, பெருநகரங்கள் அனைத்துமே வெப்பமண்டல மற்றும் துணை வெப்பமண்டலப் பகுதிகளைச் சார்ந்திருப்பது, ஆண்டு முழுவதும், பானங்கள் முதல் நார்ச்சத்து வரை உணவுப் பொருட்கள் வரை பலவகையான பயிர்களின் விநியோகத்திற்காகவும் தொடர்ந்து நடக்கிறது.

சமீப ஆண்டுகளில் முன்னேறிய நாடுகள் உணவு தானியங்களை உபரியாக உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளன என்பது உண்மைதான் ஆனாலும் கூட இந்த உண்மை அவர்கள் வெப்பமண்டல மற்றும் துணை வெப்பமண்டல பகுதிகளில் அதிக அளவில் சார்ந்திருப்பதை மாற்றாது. முன்னேறிய நாடுகளில் அதிகம் விளைந்த உணவு தானியங்களை அனுப்பிவைத்து, வெப்ப மண்டலத்திலும், மித வெப்ப மண்டலத்திலும் உள்ள மூன்றாம் உலக நாடுகளில் பெருநகரங்களுக்கு தேவையான பயிர்களை விளைவிக்கும்படி நிரப்பந்தம் தரப்பட்டதும் உண்மை.

உலகின் மிகவும் முன்னேறிய நாடுகள், கனிம வளங்கள் மற்றும் விவசாயப் பொருட்கள் ஆகிய இரண்டிற்காகவும்,மூலப் பொருட்களுக்காகவும் “தமக்கு வெளியே” உள்ள உலகையே முழுமையாக பெருமளவில் சார்ந்து உள்ளன என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மையாகும். இந்தப் பொருட்களின் விநியோகத்தை குறைந்த விலையிலும், நிலையாகவும் அவர்கள் பெற வேண்டும். காலனித்துவக் கட்டத்தில் இந்தப் பண்டங்களின் கணிசமான பகுதியை எந்தக் கட்டணமும் செலுத்தாமல் அவர்களால் பெற முடிந்தது. அதாவது இலவசமாக. காலனிகள் மற்றும் அரை–காலனிகளில் இருந்து “உபரியின் வடிகால்” என்பதன் இயல் வடிவமாக அவை இருந்தன. இப்போது அவர்கள் காலனிகளை வைத்திருந்தாலும், இல்லாவிட்டாலும் அத்தகைய பொருட்களுக்கான அவர்களின் தேவை முக்கியமானதாகவே உள்ளது.

காலனி ஆதிக்கத்தை செயல்படுத்திய ஏகாதிபத்திய அமைப்புமுறைதான் “வெளியில்” இருந்து பெருநகரம் வரை அத்தியாவசியப் பொருட்கள் குறைந்த விலையிலோ அல்லது இலவசமாகவோ, சீரான முறையில் கிடைப்பதை தொடர்ந்து உறுதி செய்தது. இப்போது எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் உட்பட மூன்றாம் உலக நாடுகளில் ஆட்சிகளை உருவாக்கி நிறுவுவது, பெருநகரத்தின் எல்லைக்கு வெளியில் அதன் விருப்பத்தை திணிப்பதற்கான வழிமுறைகளில் ஒன்றாகும். நவதாராள–உலகமய விதிகளுக்குள் நாடுகளை சிக்கவைப்பதும், அவர்கள் தங்கள் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை கைவிடவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்துவதும் தம் விருப்பங்களை திணிப்பதற்கான பொதுவான தந்திரமாகும்.

### காலனியமும் அதன் பிறகும்

மூன்றாம் உலக நாடுகளில் நிலவும் ‘அடங்காத’ ஆட்சிகளை அகற்றுவது, சி.ஐ.ஏ ஆதரவு சதித்திட்டங்கள் முதல் அத்தகைய ஆட்சிகளைக் கொண்ட நாடுகளுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிப்பது வரை பல்வேறு வழிகளில் செயல்படுத்தப்படுகிறது. பொருளாதாரத் தடைகள் மூலம் குறிவைக்கப்படும் நாடுகளின் எண்ணிக்கை மெல்ல மெல்ல அதிகரிப்பது ஏகாதிபத்தியத்திற்கு கீழ்ப்படிய மறுக்கும் போக்கு அதிகரிப்பதை காட்டுகிறது. அதில்தான் ஏகாதிபத்தியத்தின் உயிர் நாடி உள்ளது.

ஒன்று அல்லது இரண்டு நாடுகளுக்கு எதிராக மட்டும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டால் அவை ஏகாதிபத்தியத்திற்கு பயனுள்ளதாக இருக்கும் ஆனால் தடையால் பாதிக்கப்பட்ட நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்தால் அது ஏகாதிபத்திய உலக விதிகளுக்கு கடுமையான அச்சுறுத்தலாக அமையும். குறி வைக்கப்பட்ட நாடுகள், பொருளாதாரத் தடைகளினால் தங்களுக்கு ஏற்படும் ஏற்படும் பாதகமான விளைவுகளிலிருந்து தப்பிப்பதற்காக தனித்தனியாக ஒன்றுபடலாம், அத்துடன் கூடுதலாக முன்னேறிய நாடுகளில் இருந்தும் அல்லது தடையால் பாதிக்கப்படாத நாடுகளில் இருந்தும், தங்கள் சொந்த பொருளாதாரங்களுக்கு சேதம் விளைவிக்கும் விளைவுகளைத் தவிர்ப்பதற்காக பொருளாதாரத் தடைகளை மீறுவதற்கான ஊக்கத்தைப் பெறக்கூடும். அதேபோல், தடையால் பாதிக்கப்பட்ட நாடு பெரியதாகவும், பன்முகத்தன்மை கொண்டதாகவும் இருந்தால், ரஷ்யாவிற்கு எதிரான பொருளாதாரத் தடைகள் விசயத்தில் நடந்ததைப் போல, அந்தத் தடைகள் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக திருப்பித்தாக்கவும் வாய்ப்பு உள்ளது.

### உக்ரைன் போர் எதற்காக?

உக்ரைனில் நடந்துவரும் போர், ஓராண்டுக்கு முன்புதான் தொடங்கியதாகவும், ஒரு சிறிய அண்டை நாட்டின் மீது, மிகப்பெரிய சக்தி மூர்க்கத்தனமாக நடந்துகொண்டதன் விளைவுதான் இந்தப் போர் என்று மேற்கத்திய ஊடகங்கள் காட்ட முயற்சிக்கின்றன. ஆனால் உண்மையில், ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்பே உக்ரைன் நாட்டில் ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியான விக்டர் யானுகோவிச் (Viktor Yanukovych) என்பவர், சி.ஐ.ஏ உதவியில் மேற்கொள்ளப்பட்ட நவீன ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கையின் மூலம் தூக்கியெறியப்பட்ட பிறகுதான், மோதல் தொடங்கியது. தற்போது நடந்துவரும் போருக்கு பின்னணியில், மேற்கத்திய ஏகாதிபத்தியத்திற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான மோதல்தான் அடிப்படையாக உள்ளது. இயற்கை எரிவாயு பரந்த இருப்புக்களை தன் வசம் கொண்டுள்ளது ரஷ்யா. இது மொத்த உலக இருப்பில் ஐந்தில் ஒரு பங்காகும். அனைத்து நாடுகளிலும் இதுவே மிக அதிகமான அளவாகும். அதே போல ரஷ்யாவில் உலக எண்ணெய் இருப்பில் சுமார் 5 சதவீதம் உள்ளது.

மேற்கத்திய ஏகாதிபத்தியத்திற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான மோதலின் பின்னணியில் உக்ரைன் – ரஷ்யா இடையிலான போரைக் கண்ணுற்ற கருத்தாளர்களும் கூட, உலகம் ஒரு துருவ போக்கில் இருந்து, பல துருவ போக்கிற்கு மாறிச் செல்வதற்கான எத்தனிப்பாக பார்க்கிறார்கள். ரஷ்யாவின் வசம் உள்ள பரந்த இயற்கை வளங்களின் மீது தமது கட்டுப்பாட்டைச் செலுத்த வேண்டும் என்ற அவர்களின் விருப்பம் அதில் எளிதில் இடம்பெறுவதில்லை. இந்த விருப்பத்தின் வீரியத்தை குறைத்துப் பார்க்க முடியாது. போரிஸ் யெல்சினை (Boris Yeltsin) கட்டுப்படுத்துவதில் ஏகாதிபத்தியம் வெற்றிபெற்றது. அவர் எப்போதும் ஏராளமான சி.ஐ.ஏவினரால் சூழப்பட்டிருந்தார் என்பார்கள். புட்டின் காலத்தில், வேறு விசயங்களில் அவர் தவறுகள் செய்திருந்தாலும், ரஷ்யாவின்

உள்விவகாரங்களில் மேற்கத்திய ஆதிக்கம் முடிவுக்கு வந்துவிட்டது. உக்ரைன் போரில் அமெரிக்காவின் நோக்கம் 'ரஷ்யாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது', அதாவது முதலாளித்துவ பெருநகரங்களுக்கு 'அடங்கும்படியான' ஓர் ஆட்சியை நிறுவுவது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் (ஒரு ஊடக பேட்டியில்) பேசிவிட்டு பின்னர் மழுப்பியதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

ரஷ்யாவைப் போன்றதொரு பெரிய நாடு உள்ளிட்டு பல நாடுகளின் மீது ஒரே நேரத்தில் விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடைகள், மேற்கத்திய ஏகாதிபத்தியத்தின் மீது பாதிப்பை உருவாக்கத் தொடங்கியுள்ளன. இந்த தடைகளினால் இலக்கு நாடுகளில் உள்ள மக்கள் மட்டுமே பாதிக்கப்படுவதில்லை. தடைகளை விதிக்கக் கூடிய நாடுகளில் உள்ள உழைக்கும் மக்களும் கூட, இயற்கை எரிவாயு இறக்குமதி இல்லாததால் கஷ்டங்களில் தள்ளப்பட்டுள்ளனர். போருக்கு எதிராகவும், பணவீக்கத்திற்கு எதிராகவும் நடக்கும் ஆர்ப்பாட்டங்களில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஐரோப்பிய நாடுகளின் தெருக்களில் திரண்டுள்ளனர். 1970களுக்கு பின், அந்த எண்ணிக்கை இணையற்ற விதத்தில் அதிகரித்துள்ளது.

பொருளாதார தடையினால் குறிவைக்கப்பட்ட ஒரு நாட்டின் நாணய மதிப்பு சரியும் பணவீக்கம் வேகப்படும் என்று எதிர்பார்ப்பார்கள். ஆனால் டொலருடன் ஒப்பிடும்போது ரூபிள் மதிப்பு உயர்ந்துள்ளது. மேலும் பொருளாதார தடைகளை விதித்துள்ள நாடுகளிலேயே பண வீக்கம் அழிவினை உருவாக்கியுள்ளது. ஏகாதிபத்தியம் தற்போது ஒரு சோதனையான காலகட்டத்தில் நுழைந்திருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை.

(இக்கட்டுரை Monthly Review இதழில் வெளியாகியது)

***தமிழில்: சிந்தன்***

# வெனிசுவேலா : சீன உதவியுடன் விண்வெளி துறையில் பங்கேற்பு

தங்கள் நாட்டு இளைஞர்கள் மத்தியில் அறிவியல் ஆய்வுகளுக்கான பயிற்சியை ஊக்குவிக்க தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுவேலா அரசு முடிவு செய்திருக்கிறது. 1999 ஆம் ஆண்டில் வெனிசுவேலாவில் பொறுப்பேற்ற ஹியூகோ சாவேஸ் (Hugo Chávez) தலைமையிலான அரசு, அறிவியல் ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் தர முடிவு செய்தது. ஏற்கனவே அறிவியல் ஆய்வு மற்றும் தொழில்நுட்பங்களில் முன்னேற்றம் கண்டுள்ள நாடுகளோடு உடன்பாடு காண்பதில் சாவேஸ் ஆர்வம் காட்டினார். சீனாவுடனான பேச்சுவார்த்தைகள் நல்ல பலன்களைத் தந்தன.

அரசியல் மாற்றங்களால் ஆய்வுப் பணிகளில் தொய்வு ஏற்பட்டாலும், நிகோலஸ் மதுரோ (Nicolás Maduro) தலைமையிலான அரசு தனது அரசியல் உறுதியைக் காட்டி வருகிறது. வெனிசுவேலா அரசு புதிய பாய்ச்சல் வேகத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையைப் பலப்படுத்தியிருக்கிறார்கள். அதற்கான நிதி ஒதுக்கீடு அதிகரித்துள்ளது.

பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு அறிவியல் ஆய்வு மற்றும் பயிற்சி மையத்தை உருவாக்குகிறார்கள். தங்கள் பணியிடங்களில் புதிய தொழில்நுட்பத்தை உருவாக்குவது மற்றும் ஏற்கனவே உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்களைக் கையாளுவது ஆகியவற்றிற்கு தொழிலாளர்களைப் பழக்கப்படுத்த முடிவெடுத்திருக்கின்றனர். கல்வித்துறையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சோசலிசப் பயிற்சி மற்றும் கல்விக்கான தேசிய கல்வி நிறுவனத்தில் பயின்று வரும் இளைஞர்கள், இரசாயனவியல் தொழில்நுட்பத்திற்கான தேசிய மையத்திற்கு அடிக்கடி அழைத்துச் செல்லப்படுகிறார்கள். தலைநகர் காரகசில் அமைந்துள்ள பல ஆலைகளுக்கு செல்லும் அவர்கள் புதிய தொழில்நுட்பங்கள் பற்றி அறிந்து கொள்கின்றனர். அறிவியல் படிப்புகளைத் தேர்வு செய்ய அவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இரசாயனவியல் தொழில்நுட்பத்திற்கான தேசிய மையத்தில் நடைபெறும் பல்வேறு அறிவியல் ஆய்வுகள் பற்றி மாணவர்களுக்கு விளக்குகின்றனர். எண்ணெய் வளத்துறையின் தன்மைகள பற்றி அவர்கள் தெரிந்து கொள்வதோடு, எண்ணெய் வளத்தை எடுப்பது, சுத்திகரிப்பது ஆகியவற்றில் அண்மைக்காலத் தொழில் நுட்ப வளர்ச்சியை எடுத்துரைக்கிறார்கள். அறிவியல் ஆய்வு மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவற்றின் மூலமாக நாட்டின் உற்பத்தித் திறனை அதிகரிக்க முடியும் என்று வெனிசுவேலாவின் ஆய்வாளர்கள் நம்புகிறார்கள்.

**விண்வெளி ஆய்வுக்கு அழைப்பு**

வெனிசுவேலாவில் அறிவியல் ஆய்வுப் பயிற்சிகளை அளிக்க சீனா முன்வந்திருக்கிறது. தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் வெனிசுவேலாவின் விஞ்ஞானிகள் மற்றும் ஆய்வாளர்களுக்கு பயிற்சிகளைத் தர சீனாவுடன் உடன்பாட்டில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். சீனாவின் அறிவியல் ஆய்வுப் பிரதிநிதிகளைச் சந்தித்த வெனிசுவேலாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கப்ரியேல் ஜிமெனெஸ், (Gabriel Jiménez) "விண்வெளி ஆய்வில் இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்த முடிவு செய்திருக்கிறோம்" என்று குறிப்பிட்டார். வெனிசுவேலாவில் ஹியூகோ சாவேஸ் ஜனாதிபதியாக இருந்தபோதே சீனாவுடன் விண்வெளி ஆய்வு உள்ளிட்ட பல்வேறு அறிவியல் ஆய்வுகள் குறித்த இருதரப்பு உறவுகள் தொடங்கிவிட்டன. விண்வெளியில் தனியாக சீனா அமைத்து வரும் ஆய்வு மையத்திலும் தனது பங்கை செலுத்துமாறு வெனிசுவேலாவிடம் பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது. அறிவியல் தொழில்நுட்பங்களில் பெரும் முன்னேற்றத்தைக் காண சீனாவுடனான உறவு மற்றும் அவர்களிடமிருந்து கிடைக்கவிருக்கும் பயிற்சிகள் பெரும் பங்களிக்கும் என்று வெனிசுவேலா அரசு கூறியுள்ளது.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாபெரும் தலைவர் பாலன்

தன் வாழ்நாள் முழுதும் மக்களுக்காகவே போராடிய மாபெரும் தலைவர் கே. பாலதண்டாயுதம் மறைந்து 50 ஆண்டுகள் ஆகின்றன. 1962 ஆம் ஆண்டு சிறையில் இருந்து விடுதலையான பாலதண்டாயுதம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சென்னை மாவட்ட செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். அவர் தன்னை அறிமுகம் செய்துகொண்டபோது, ''என்பெயர் கே. பாலதண்டாயுதம். தோழர்கள் என்னை பாலன் என அழைக்கலாம்'' என்று கூறினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சிறப்பு மாநாடு சென்னையில் அதே ஆண்டுதான் நடைபெற்றது. மாநில மாநாட்டை சென்னையில் நடத்துகின்ற குழுவில் தோழர் பாலன் தலைமையில் தோழர்கள் மோகன் குமாரமங்கலம், ஏ.எஸ். கே, கே. முருகேசன், ஹரிபட், பரமேஸ்வரன், கஜபதி, டி. பழனிசாமி, தா. பாண்டியன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். பாலன் ஆயுள் தண்டனையை அனுபவித்து வெளியே வந்திருந்த நேரம் அது.

சிறப்பு மாநாட்டின் நிதி வசூல் தனியே வங்கிக் கணக்கில் போடப்பட்டு வந்தது. சென்னை மாவட்ட குழுவின் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது ஒருவர் கட்சி அலுவலகத்திற்கு வந்து பத்து ரூபாய் நோட்டுக்களாக ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்தார். அப்போது அலுவலகத்தில் முழுநேர ஊழியராக இருந்த ஒரு தோழரிடம் பணத்தை கொடுத்து வங்கியில் போடச் சொல்லி அனுப்பி விட்டார்கள். போனவர் திரும்பி வரவில்லை "பணத்தோடு ஓடிவிட்டான்" என்றார் ஒருவர்.

தோழர்கள் தா. பாண்டியனும் டி. பழனிசாமியும் அந்தத் தோழரின் வீட்டிற்கு மாலை சென்றார்கள்.

அந்தத் தோழரின் வீடோ பரிதாபமான நிலையில், வறுமையின் பிடியில் இருந்தது. காற்று புகாத அறை. தோழர் போர்வையை போர்த்தி நடுங்கிக் கொண்டு படுத்திருந்தார். அருகில் அவர் மனைவியும் அழுது கொண்டிருந்தார். தோழரின் தந்தையும் கம்யூனிஸ்ட் ஆக இருந்து மறைந்தவர். சென்ற தோழர்கள் மனைவியிடம் "என்ன நடந்தது" என்று கேட்டுள்ளார்கள்.



மனைவி "நீங்கள் கட்சிப் பணத்தை வங்கியில் போடச் சொல்லி இவரிடம் கொடுத்தீர்களாம். வங்கியில் பணத்தை வைப்பிலிடுவதற்காக இவர் சீட்டு எழுதிக் கொண்டிருந்தபோது யாரோ இரண்டு பேர் நெருங்கி வந்து பேனா எடுப்பது மாதிரி ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டார்களாம். வங்கியிலிருந்து அழுது கொண்டே வந்தார். காய்ச்சல் மாதிரி சூடேறிவிட்டது. அனலாய் கொதிக்கின்றது" என்றார்.

பாண்டியன் அவர் தலையைத் தொட்டு பார்த்தார். சூடு அனல் பறந்தது. கை கால்கள் நடுங்கிக் கொண்டிருக்கின்றன. உதறல் எடுத்தபடியே அழுது கொண்டே "கட்சி பணம்", "கட்சி பணம்" என்று மட்டும் புலம்பிக் கொண்டிருந்தார்.

**எஸ். காசி விஸ்வநாதன்**

தோழர்கள் இருவரும் அலுவலகம் திரும்பி வந்து நடந்த செய்தியை தலைவர்களிடம் சொன்னார்கள். மூத்த தோழர் ஒருவர் "உடனடியாக பொலிஸில் புகார் கொடுங்கள். அந்த ஆளை நாலு தட்டு தட்டினால் நோட்டுகள் வந்து விழும்" என்றார். வேறு சிலரும் அதனை ஆதரித்தார்கள். பாலனும் அங்கிருந்தார். அவர் என்ன சொல்லப்போகிறார் என்று மற்றவர்கள் அவர் முகத்தையே பார்த்தார்கள்.

பாலன், "நாளை கூடும் செயற்குழு கூட்டத்தில் இதுபற்றிப் பேசலாம்" என்று கூறிவிட்டு எழுந்து, தா. பாண்டியனிடம் "நீ பார்த்தாயே உனக்கு சந்தேகமா என்று கேட்டார். தா.பாண்டியன், ''அவர் வீட்டைப் பார்த்தால், அவருடைய மனைவியை பார்த்தால் அப்படி தெரியவில்லை. பணம் திருட்டு போய்விட்டது என்று நினைக்கிறேன்'' என்றார். யாரிடமும் எதுவும் பேசாமல் மௌனமாக பாலன் வீட்டுக்குப் போய் விட்டார்.

மறுநாள் செயற்குழு கூடியது. அதே விஷயம் குறித்து விவாதம் நடந்தது. "அந்த தோழரை பொலிஸில் ஒப்படைக்க வேண்டும்" என்று முதல்நாள் ஒலித்த குரல் ஓங்கி ஒலித்தது. பாலன் திடீரென கோபப்பட்டார். "ஒரு தோழனை பொலிஸில் ஒப்படைப்பதா? அவன் ஒரு கம்யூனிஸ்ட். அவனுடைய அப்பாவும் ஒரு கம்யூனிஸ்ட். கட்சிக் குடும்பம். ஆயிரம் ரூபாய்க்காக அவனை பொலீஸிடம் ஒப்படைப்பதா? நாம் வேண்டுமானால் அவரை அழைத்து விசாரிக்கலாம். நான் வேண்டுமானால் அவரை அடிக்கிறேன். ஆனால், பொலீஸிடம் புகார் கொடுக்க கூடாது . நம் கட்சியில் இப்படி ஒரு யோசனையா" என்றார்.

மூத்த தோழர் விடுவதாக இல்லை. தன் கருத்தை அழுத்தமாகச் சொல்லிக் கொண்டே இருந்தார். பாலன் உணர்ச்சிவசப்பட்டு "நான் வேண்டுமானால் பணத்தைக் கட்டி விடுகிறேன். இந்த பிரச்னையை இத்தோடு விட்டு விடுங்கள்" என்றார். கூட்டத்தில் அதன்பின் யாரும் எதுவும் பேசவில்லை.

மறுநாள் மாலை கட்சியை கவனிக்க போடப்பட்ட ஒரு பொலிஸ்காரர் வந்தார். பாலனிடம், "உங்கள் பையன் ஒருத்தன் பணத்தை வங்கியில் போடப் போனபோது ஒருத்தன் பாக்கெட் அடிச்சுட்டான். நேத்து காலையில் பொலிஸ் ஸ்டேஷனுக்கு வந்து, அந்த பையன் கட்சி பணம் சார் எப்படியாவது பிடிச்சு கொடுங்க இல்லைன்னா நான் செத்துப் போயிடுவேன்னு அழுதான். நாங்க தேடிக்கிட்டு இருக்கோம். ரூபாய் நோட்டுன்னா பிடிக்கிறது கஷ்டம்" என்று கூறினார்.

சிறைகளைக் கண்டு அஞ்சாத பாலன் என்னும் சிங்கத்தின் கண்களில் கண்ணீர் மல்கி நிற்பதை தோழர்கள் கண்டார்கள்.

இதயமும் மூளையும் உடல் வலிமையும் ஒருங்கே பெற்ற தலைவனை பெற்றிருக்கிறது கட்சி என்று மகிழ்ந்தார்கள்.

பாலன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்சி படித்துக்கொண்டிருந்தபோது, இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்றதால் ஜவாஹர்லால் நேருவின் வேண்டுகோளை ஏற்று மாணவர்களிடமும் பொதுமக்களிடமும் நிதி வசூல் செய்தார்கள். அந்த நிதியை ஒரு மாணவன் கையாடல் செய்து விட்டான். இது தவறு என்று சுட்டிக்காட்டி போராடியதால் பாலதண்டாயுதத்தை பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கினார்கள்.

பாலன் தன் சொந்த வாழ்க்கையை முதன்மையாக நினைக்கவில்லை. திருநெல்வேலி மாவட்டத்திற்கு பணியாற்ற அனுப்பப்பட்டார். அரசியல் பொதுவுடைமை இயக்கமே என்பதை முடிவு செய்தார். பேராசிரியர் நா. வானமாமலையுடன் நெருங்கிய தோழமை கொண்டிருந்தார். மாணவர் அமைப்பை உருவாக்கினார்.

எழுத்தாளர் கல்கி 1940 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு கதை எழுதி இருந்தார். அதன் தலைப்பு 'விநாயகத்தின் விடுதலை' என்பதாகும். விநாயகம் என்பவர் ஒரு கௌரவ ஜெயில் விசிட்டர். அவர் ஒரு கனவு காண்கிறார். கனவில், சத்தியாகிரகம் செய்து சிறைக்குப் போய் விடுதலை எப்போது வரும் என்று தவித்துக் கொண்டிருக்கிறார். கடைசியில் ஒரு நாள் விடுதலை கிடைக்கிறது. விடுதலை, ஆனதும் சிறையின் வாசலிலேயே அவரை மறுபடியும் பாதுகாப்பு சட்டப்படி கைது செய்கிறார்கள். உடனே அவர் பிராணன் போய் கீழே விழுந்து விடுகிறார். தூக்கத்திலிருந்து விழித்து எழுந்ததும், விநாயகம் சிறை விசிட்டர் வேலையை ராஜினாமா செய்கிறார்.

கதையை எழுதிய கல்கியை அவரது நண்பர் கிருஷ்ணசாமி பாரதி நேரில் சந்திக்கிறார். கதையைப் பற்றி பேசிக் கொண்டிருந்தபோது "உங்கள் கதை, அதாவது கற்பனை கதை, வெளியான அதே சமயத்தில் இங்கே அதே மாதிரி ஒரு சம்பவம் நடந்தது. ஆனால் ஒரு வித்தியாசம். உங்களுடைய கற்பனைக் கதையில் விநாயகம் பிராணன் போய் விடுகிறது. இங்கே நாயகன் சிரித்தபடி தலை நிமிர்ந்து நிற்கிறான்" என்றார்.

"விவரமாகச் சொல்லுங்கள்" என்று கல்கி கேட்டவுடன் "பாலதண்டாயுதம் தெரியும் இல்லையா'' என்று கிருஷ்ணசாமி பாரதி கேட்டார். "நேரில் தெரியாது, ஆனால் அவரது பெயரை கேள்விப்பட்டிருக்கிறேன். சிதம்பரத்தில்..." என்றார் கல்கி. ''ஆமாம் ஆமாம் அவரேதான், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேர் வாங்கியவர்தான். ஆனால் அவருக்கு இங்கே ரொம்ப நல்ல பெயர்'' என்று கூறினார் கிருஷ்ணசாமி பாரதி.

"அப்புறம் என்ன நடந்தது" என்று கல்கி கேட்டார். கிருஷ்ணசாமி பாரதி, "பாலதண்டாயுதம் சிறைக்கு வருவதற்கு கொஞ்ச நாட்கள் முன்பு தான் திருமணம் செய்து கொண்டார். அவரது மனைவி கல்லூரி மாணவி. அவர், கணவரைப் பார்ப்பதற்காக ஒரு சமயம் இங்கே வந்திருந்தார். புது மணம் புரிந்தவர்கள். அதிலும் காதல் கல்யாணம். ஆனால் சோக நாடகம்" என்று கூறிவிட்டு தனது பேச்சை நிறுத்தினார் கிருஷ்ணசாமி பாரதி.

"கடைசியில் நாடகம் சுகமாகத்தானே முடிந்தது" என்று ஆர்வத்தோடு கேட்டார் கல்கி.

"இல்லை, பாலதண்டாயுதம் சிறையிலிருந்து விடுதலையான பிறகு வாழ்க்கை நடத்துவது பற்றி என்னென்னவோ திட்டங்கள் போட்டுக் கொண்டிருந்தார். அவருக்குத் தெரிந்தவர்கள் எல்லாம் கொஞ்ச நாள் மனைவியுடன் இல்வாழ்வு நடத்துங்கள் என்று சொன்னார்கள். விடுதலை நெருங்க நெருங்க அவர் தவித்த தவிப்பையும் பரபரப்பையும் பார்க்க வேண்டுமே! விடுதலைக்கு முதல் நாள் அவர் தரையில் நடக்கவே இல்லை. ஒவ்வொருவரிடமும் போய் விடை பெற்றுக் கொண்டார். இரவு ஒரு நிமிடம் கூட கண் மூடி இருக்க மாட்டார் என்று நினைக்கிறேன்" என்று கூறிவிட்டு பேச்சை நிறுத்தினார் கிருஷ்ணசாமி பாரதி.

"மறுநாள் விடுதலையானாரா, இல்லையா" கல்கி ஆவலுடன் கேட்டார்.

கிருஷ்ணசாமி பாரதி, "கொஞ்சம் பொறுங்கள். மறுநாள் பொழுது விடிந்து சிறைச்சாலையின் கதவு திறந்தது. பாலதண்டாயுதம் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தார். அவரது முகம் மலர்ந்து இருந்தது. அவரை வரவேற்பதற்கு, அவருடைய மனைவி சிறை வாசலில் தயாராகக் காத்துக் கொண்டிருந்தார். கணவனும் மனைவியும் பேசிக்கொள்வதற்குள் சில பொலீஸ் அதிகாரிகள் வந்தார்கள். பாலதண்டாயுதத்தை அழைத்துக் கொண்டு போய் வீதியில் நின்று கொண்டிருந்த பொலீஸ் வண்டியில் ஏற்றினார்கள். பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவரை கைது செய்து, வேலூர் ஜெயிலுக்கு கொண்டு போவதாக தெரிந்தது.

அப்போது சிவில் ஜெயிலைச் சுற்றி தட்டி வைத்து கட்டவில்லை. நாங்கள் எல்லோரும் உள்ளே இருந்து பார்த்துக் கொண்டிருந்தோம். அந்தப் பரிதாபக் காட்சியை என்னால் மறக்கவே முடியாது. அந்த நிலையிலும் பாலதண்டாயுதத்தின் முகம் மலர்ந்தபடியே இருந்ததுதான் எனக்கு மிகுந்த வியப்பை அளித்தது. இப்படி சொற்ப மனிதர்கள் தான் இருப்பார்கள் என்று நினைக்கிறேன்'' என்று நிஜக் கதையை சொல்லி முடித்தார் கிருஷ்ணசாமி பாரதி.

இது போன்று எத்தனையோ சம்பவங்கள். மக்களுக்காகப் போராடினார். விடுதலை காலத்திலும் போராடினார். விடுதலைக்குப் பிறகும் போராடினார். 1950களில் பொதுவுடைமை இயக்கம் தடை செய்யப்பட்டது. பாலனை முதல் எதிரியாக சேர்த்து திருநெல்வேலி சதி வழக்கு போடப்பட்டது. 1952 பிற்பகுதியில் பாலன், இயக்கம் சொன்னபடியும், ராஜாஜியின் வேண்டுகோள்படியும் சரணடைந்தார். அவரை முதல் எதிரியாக சேர்த்து மூவர் மீது வழக்கு நடந்தது.

ஏற்கனவே 97 பேர் மீது வழக்கு போடப்பட்டு தண்டனையும் கொடுக்கப்பட்டிருந்தது. இரா. நல்லகண்ணு எட்டு ஆண்டு சிறை தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்த நேரம். பாலதண்டாயுதம், மீனாட்சிநாதன் இருவருக்கும் ஆயுள் தண்டனை. 1962 வரை பத்தாண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார். பின்னர் கோவை சிறையில் இருந்து விடுதலை ஆனார். தொடர்ந்து இயக்கப் பணிகளில் ஈடுபட்ட பாலன், 1971 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வென்றார்.

பாலன் வாழ்ந்தது 55 ஆண்டுகள்தான். 1918 இல் பிறந்தார். சிறையில் கழித்த ஆண்டுகள் 12. தலைமறைவு வாழ்க்கை ஆறு ஆண்டுகள். அவருக்கு கிடைத்த மணவாழ்வு 1962 முதல் 1973 வரை 11 ஆண்டுகளே. அந்நாட்களிலும் அவர் வீட்டில் செலவு செய்த நேரம் மிகவும் குறைவே.

**தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...**

# தமிழ் மொழிக்கான பேரகராதி ‘தமிலெக்ஸ்’

**ஜெர்**மனி அறிவியல் அறிஞர்கள் அகாடமி (German Academy of Science) சார்பில், ‘தமிலெக்ஸ்’ (Tamilex) எனும் செவ்வியல் தமிழ் மொழிக்கானப் பேரகராதி வெளியாக உள்ளது. அனைத்து வார்த்தைகளின் முழு வரலாற்றுடன், ரூ.10 கோடி செலவில் ஜெர்மனியிலிருந்து வெளியாகின்றது.

செம்மொழியான தமிழ் மொழி இலக்கியங்களின் தொகுப்புகள், மனிதகுலத்தின் சிறந்த பாரம்பரியத்திற்கு பெரும் பங்களித்து வருகின்றன. இருப்பினும் இவற்றை பற்றி இன்னும் மேற்கத்திய நாடுகள் அதிகம் அறியாமலேயே உள்ளன. இதனால், சிறப்புமிக்க செவ்வியல் தமிழ் மொழி மீது இந்தியாவை விட வெளிநாடுகளில் அதிக ஆர்வம் காட்டப்படுகிறது.

இதன் தாக்கமாக, ‘தமிலெக்ஸ்’ எனும் முதல்வகை செவ்வியல் தமிழ் பேரகராதி ஜெர்மனியில் வெளியாக உள்ளது. இதற்காக அந்நாட்டின் ஜெர்மனிய அறிவியல் அறிஞர்கள் அகாடமி ரூ.10 கோடி ஒதுக்கியுள்ளது. இந்த ‘தமிலெக்ஸ்’ பேரகராதி 24 வருடங்களில் உருவாக்கும் திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பொறுப்பு, ஜெர்மனியின் ஹம்பர்க் பல்கலைக்கழகத்தின் (University of Hamburg) இந்தியா, திபெத் கலாச்சாரம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி மைய ஓலைச்சுவடிப் பிரிவின் பேராசிரியர் ஈவா வில்டன் (Eva Wilton) என்பவரிடம் அளிக்கப்பட்டுள்ளது.

இவர், ‘தமிலெக்ஸ்’ பேரகராதி உருவாக்கம் பற்றிய அதிகாரப்பூர்வமானத் தகவலை, ஜெர்மனியின் ஹம்பர்க் நகரில் ஏப்ரல் 22 இல் நடைபெற்ற தமிழ் வருடப் பிறப்பு விழாவில் வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து, ஹம்பர்க் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் ஈவா வில்டன் கூறும்போது, “இத்திட்டத்தில் சங்க இலக்கியத்தின் மொழிபெயர்ப்பு மற்றும் முழுமையான சொல் அகராதி அடங்கும் என்பது போற்றுதலுக்குரியது. இதனால் தற்கால தலைமுறையினர் சங்க இலக்கியங்களையும் எளிமையான முறையில் கற்கும் வாய்ப்பு ஏற்படுவது திண்ணம்” என்று தெரிவித்தார்.

சென்னை பல்கலைக்கழக அகராதி: இதுபோல், தமிழுக்கான அகராதிகள் பல உள்ளன. இதில் முக்கியமானதாக சென்னை பல்கலைக்கழகம் சார்பில் வெளியான 7 தொகுதிகள், பேரகராதியாகக் கருதப்படுகின்றன.


கடந்த 1930 ஆம் ஆண்டுகளிலேயே முடிக்கப்பட்ட இந்த பேரகராதியில், தமிழ் சொற்களுக்கான அர்த்தங்கள் உதாரணங்களுடன் அளிக்கப்பட்டுள்ளன. முதல் 20 நூற்றாண்டுகளின் தமிழ் சொற்கள் இடம்பெற்ற இந்த பேரகராதி வெளியான பிறகும் பல சங்க இலக்கிய நூல்கள் பதிக்கப்பட்டுள்ளன. இதனால், 1930 ஆம் ஆண்டுகளுக்கு பின் பதிப்பானவற்றின் குறிப்புகள் இந்த பேரகராதியில் இல்லை. இந்த பேரகராதி சிகாகோ பல்கலைக்கழகம் சார்பில் டிஜிட்டல் பதிப்பாகவும் வெளியாகி உள்ளது.

*ஆர்.ஷபிமுன்னா*

இந்நிலையில், இதுவரை பதிப்பிக்கப்பட்டதில், முதல் பத்து நூற்றாண்டுகளின் செவ்வியல் தமிழ் இலக்கியங்களின் சொற்கள் அதற்கான அர்த்தங்களுடன் ஜெர்மனியின் பேரகராதியில் வெளியாக உள்ளன. இந்த சொற்கள் ஆரம்பம் முதல் கடைசி வரை எத்தனை வாக்கியங்களில் இடம்பெற்றுள்ளதோ, அத்தனையும் அதன் பொருளுடன் பேரகராதியில் பதிக்கப்பட உள்ளது.

சுமார் 24 ஆண்டுகால திட்டமான இந்த ‘தமிலெக்ஸ்’ பணியில் தமிழகத்திலும் சில பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இந்த அகராதி அச்சு வடிவிலும் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு முன்பாக, இணையத்தில் பயனாகும் வகையில், டிஜிட்டல் வடிவில் வெளியாக உள்ளது.





பேராசிரியர் ஈவா வில்டன்

**யார் இந்த ஈவா வில்டன்?**

ஈவா வில்டன் அவர்கள் ஜெர்மனியிலுள்ள ஒப்லாடன் (Opladen) என்னும் இடத்தில் 28.02.1965 இல் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் ரோல்ட் வில்டன் (Rolt Wilden) தாயார் பெயர் உர்சுலா வில்டன் (Ursula Wilden) என்பதாகும். தந்தையார் பொறியாளராகவும் தாயார் இரசாயனவியல் துறையிலும் பணியாற்றுகிறார்கள்.

ஜெர்மனியில் பணியாற்றிய தமிழ்நாட்டுப் பேராசிரியர் சீனிவாசன் அவர்களே, ஈவா வில்டனுக்கு தமிழ் மொழியையும் தொல்காப்பியம், குறுந்தொகை மற்றும் சங்க இலக்கியங்களையும் அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் இவர் எட்டாண்டுகள் சீனிவாசனிடம் கற்றுள்ளார். சங்க இலக்கியங்களில் ஓர் உலகப்பொதுமை காணப்படுவதை உணர்ந்த ஈவா வில்டன், சங்க இலக்கியம் சார்ந்த ஆய்வுகளிலும் ஈடுபாடு காட்டி வருகின்றார்.

ஐரோப்பாவின் தற்போதைய ஒரே தமிழ்ப் பேராசிரியரான முனைவர் ஈவா வில்டன், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் (Central Institute of Classical Tamil Studies) 2015 ஆம் ஆண்டிற்கான குடியரசுத் தலைவர் விருதான குறள் பீடம் விருதை பெற்றவர். புதுச்சேரியின் கீழைநாடுகளுக்கான பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் (French Research Institute for the Low Countries) தமிழ்ப் பிரிவின் தலைவராகவும் இருந்தவர். நற்றிணை, குறுந்தொகை மற்றும் அகநானூற்றின் 1–120 பாடல்களான களிற்றியானை நிரை ஆகியவற்றின் செம்பதிப்புகளை தலா 3 தொகுதிகளாக ஈவா வில்டன் வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரகசியமாகப் இயங்கும் பிரித்தானியாப் படைகள்

2011 ஆம் ஆண்டில் இருந்து 19 நாடுகளில் இரகசியமாக பிரித்தானியா சிறப்புப் படைகள் இயங்கி வந்திருப்பதாக ஆய்வு விபரங்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகள் பிற நாடுகளின் இறையாண்மையை மீறி அவற்றின் விவகாரங்களில் தலையிடுவது வாடிக்கையானதாகும். எதிர்க்கட்சிகளுக்கு நிதி தருவது, பயங்கரவாத அமைப்புகளை ஊக்குவிப்பது, அத்தகைய அமைப்புகளுக்கு ஆயுதங்களை வழங்குவது, ஒரு நாட்டை மற்றொரு நாட்டோடு மோத விடுவது உள்ளிட்ட பல்வேறு வேலைகளை செய்து வருகின்றன. அமெரிக்கா தான் இத்தகைய சீர்குலைவு வேலைகளை அதிகமாகச் செய்கிறது. அதேநேரத்தில், பிரித்தானியாவும் தனது பங்குக்கு சில வேலைகளைச் செய்கிறது என்பது ஆய்வில் அம்பலமாகியுள்ளது. ‘‘ஆயுதந்தாங்கிய வன்முறை மீதான நடவடிக்கை'' (Action on Armed Violence) என்ற ஆய்வுக்குழு மேற்கொண்ட ஆய்வில் கடந்த 12 ஆண்டுகளில் 19 நாடுகளில் இரகசியமாக பிரித்தானியாவின் சிறப்புப் படைகள் இயங்கி வந்துள்ளன என்று தெரிய வந்திருக்கிறது. இந்த ஆய்வறிக்கையை கார்டியன் நாளிதழ் வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவின் சிறப்புப் படைகள் இரகசியமாக இயங்கிய 19 நாடுகளில் 11 நாடுகள் இஸ்லாமிய நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஈராக், அல்ஜீரியா, லிபியா, டுனீசியா, ஓமான், சோமாலியா, யேமன் ஆகியவை அந்த இஸ்லாமிய நாடுகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. அத்தோடு, ரஷ்யா, உக்ரைன், நைஜீரியா, கென்யா, சைப்ரஸ், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளிலும் இந்த சிறப்புப் படைகள் இரகசியமாக இயங்கியுள்ளன. அண்மையில் மோதல் எழுந்துள்ள சூடானிலும் அவர்கள் இயங்கி வருகிறார்கள். பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானுக்கும் பிரிட்டனின் சிறப்புப் படைகள் அனுப்பப்பட்டதாக ஆய்வறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பெரிய நாடான பிரான்சையும் விட்டு வைத்ததாகத் தெரியவில்லை. அங்கும் இந்த சிறப்புப் படையினரின் கைவரிசை காட்டப்பட்டிருக்கிறது. மாலி மற்றும் எஸ்தோனியா ஆகிய நாடுகளுக்கும் சிறப்புப் படைகளை இரகசியமாக பிரித்தானியா அனுப்பி வைத்திருக்கிறது. இந்த சிறப்புப் படைகளின் பெரிய அளவிலான நடவடிக்கையாக சிரியாவில் அவர்கள் மேற்கொண்டவை கருதப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் இருந்து இந்தப் படைகள் அங்கு இயங்கி வருகின்றன. ஜனாதிபதி பஷிர் அல் அஸ்ஸாத் தலைமையிலான அரசைக் கவிழ்க்கும் நோக்கத்தில் அங்கு இயங்கிவரும் எதிர்த்தரப்போடு இணைந்து இந்த சிறப்புப் படைகளும் சண்டையில் இறங்கியுள்ளன.



### நேரடிப் போர்

உக்ரைனில் பிரித்தானியாவின் சிறப்புப் படைகள் நேட்டோ சார்பில் நிறுத்தப்பட்டுள்ளன. 97 படைப் பிரிவுகள் அங்கு இயங்கி வருகின்றன. அவற்றில் பிரித்தானியா சார்பாக 50 பிரிவுகளும், அமெரிக்காவின் 11 பிரிவுகளும், பிரான்ஸின் 15 பிரிவுகளும் அவற்றில் இடம் பிடித்துள்ளன. இந்த விபரங்கள் அமெரிக்க இராணுவத் தலைமையகம் பென்டகனில் இருந்து கசிந்த ஆவணங்களில் இருந்தன. ஆனால், இவர்களின் பணி என்ன என்பது அந்த ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை. ஆனால், தனியாக 50 பேர் கொண்ட சிறப்புப் படைப்பிரிவு ஒன்று உக்ரைன் படைகளுடன் இணைந்து ரஷ்யாவுக்கு எதிராக சண்டை போட்டதாக அந்த ஆவணங்கள் அம்பலமாக்கின. போர் நடந்து கொண்டிருக்கும்போது பல்வேறு வகையான பயிற்சிகள், மற்றும் குறிப்பான சில நபர்களைப் பாதுகாப்பது உள்ளிட்ட பணிகளை பிரித்தானியாவின் சிறப்புப் படைகள் செய்திருக்கின்றன. எந்தவிதத் தயக்கமுமின்றி யாரை வேண்டுமானாலும் கொல்லலாம் என்று இந்தப் படைப் பிரிவுக்கு பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் கேமரூன் அனுமதி அளித்திருந்தார். இந்தப் படைப்பிரிவு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பிரித்தானியா நாடாளுமன்றம் ஒப்புதல் தர வேண்டும். ஆனால் சிறிய நடவடிக்கைகளுக்கு அதைப் பெற வேண்டியதில்லை என்பதால் சிறிய இரகசிய வேலைகள் ஏராளமான அளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

---

**7ம் பக்கத்தொடர்ச்சி...**

எதற்கும் அஞ்சாத பாலன், *1973 மே 31* அன்று விமான விபத்தில் அகால மரணமடைந்தார்.

(சென்னையிலிருந்து *1973 மே 31* அன்று இரவு *7.35* மணிக்கு புறப்பட்ட அந்த இந்தியன் ஏர்லைன்ஸ் போயிங் *737* ரக விமானத்தில் *58* பயணிகளும் *7* பணியாளர்களும் இருந்தனர். புது டெல்லியில் தரையிறங்குவதற்கு சற்று முன்னர் அந்த விமானம் விழுந்து நொறுங்கியதில், அப்போது மத்திய உருக்குத் துறை அமைச்சராக இருந்த மோகன் குமாரமங்கலம் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் கே. பாலதண்டாயுதம் உள்பட 48 பேர் உயிரிழந்தனர்.

அப்போதுதான் இலங்கை சென்றுவிட்டு, சில நாள்கள் முன்னரே சென்னை திரும்பிய பாலதண்டாயுதத்துக்குத் டெல்லி செல்வதற்கு கடைசி வரை ரிக்கெற் உறுதியாகாமல் இருந்திருக்கிறது. இந்திய நாடாளுமன்ற தூதுக்குழுவில் ஒருவராக ஹங்கேரி செல்ல வேண்டுமென்பதால் உடனே டெல்லி புறப்பட விரும்பிய தோழர் பாலதண்டாயுதம், நண்பர் ராதா என்பவருடன் விமான நிலையம் சென்றிருக்கிறார். இன்று கிடைக்காவிட்டால் நாளை என்று கூறிக்கொண்டு ரிக்கெற் கவுன்டருக்கு சென்றபோது, ரிக்கெற் உறுதிசெய்யப்பட்ட விஷயம் தெரிய வந்திருக்கிறது. அவரது அந்த புது டெல்லிப் பயணமே இறுதிப் பயணமாகிவிட்டது.)

# இந்தோனேசியாவில் சீ.ஐ.ஏ. ஏற்படுத்திய பேரழிவு!

1965 செப்ரெம்பர் 30 ஆம் திகதி இந்தோனேசியாவின் வரலாற்றில் மட்டுமின்றி உலக வரலாற்றிலும் மறக்கப்பட முடியாத ஒரு நாளாகும். அந்த நாளிலும் அதைத் தொடர்ந்து வந்த நாட்களிலும்தான் அமெரிக்க சீ.ஐ.ஏ. உளவு அமைப்பின் ஆலோசனையில் இந்தோனேசிய இராணுவ அதிகாரிகளில் ஒருவரான ஜெனரல் சுகார்ட்டோ (Suharto) ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டு பதவியில் இருந்த டாக்டர் சுகார்னோவின் (Sukarno) அரசைக் கவிழ்த்து அவரைத் தடுப்புக் காவலில் வைத்துவிட்டு, தனது கைகளில் அதிகாரங்களை எடுத்துக்கொண்டு சுமார் 5 இலட்சம் இந்தோனேசிய மக்களை சுட்டும் வெட்டியும் படுகொலை செய்த நாள். இத்தகைய ஒரு நடவடிக்கை உலக வரலாற்றில் முன்னரோ பின்னரோ என்றுமே நடந்ததில்லை.

இந்தோனேசியக் கம்யூனிஸ்ட்டுகளை அழிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டே சுகார்ட்டோ பாசிச இராணுவக் கும்பல் இந்தப் படுகொலை நிகழ்ச்சியை அரங்கேற்றியது. அவர்களுடைய எதேச்சாதிகார நடவடிக்கைகள் அத்துடன் முற்றுப்பெற்று விடவில்லை. அடுத்த வந்த 31 ஆண்டுகள் சுகார்ட்டோ சட்ட விரோதமாக பதவியில் இருந்து கொண்டு இந்தோனேசிய மக்களைத் தனது இராணுவ நுகத்தடியில் பூட்டி சொல்லொணாத் துன்பங்களை விளைவித்து வந்தான்.

இந்தோனேசியா அப்பொழுதும் இப்பொழுதும் ஆசியாவில் சனத்தொகை கூடிய நாடுகளில் ஒன்றாகும். இந்தோனேசியாவில் இராணுவச் சதி நடைபெற்ற 1965 இல் அதன் சனத்தொகை ஏறத்தாழ 10 கோடியாகும். இந்தோனேசியா சுமார் 18,000 தீவுக்கூட்டங்களால் ஆன ஒரு நாடாகும். பெரும்பாலான மக்கள் இஸ்லாமியர்களாகும். ஜகார்த்தா அதன் தலைநகரமாகும்.

இந்தோனேசியா 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முதலில் போர்த்துக்கல் நாட்டால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து அந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் டச்சுக்காரர்கள் (நெதர்லாந்து) இந்தோனேசியாவை ஆக்கிரமித்தனர். இந்த அந்நிய ஆக்கிரமிப்புக் காலனித்துவவாதிகளுக்கு எதிராக



**Sukarno**

இந்தோனேசிய மக்கள் தொடர்ந்து பல போராட்டங்களை நடத்தி வந்தனர்.

இரண்டாம் உலக யுத்த 1942 – 45 காலகட்டத்தில் ஹிட்லரின் இராணுவக் கூட்டிலிருந்த யப்பான் இந்தோனேசியாவை ஆக்கிரமித்தது. இறுதியில் இரண்டாம் உலக யுத்தத்தில் ஹிட்லரின் நாஜி ஜெர்மனியும், முசோலினியின் பாசிச இத்தாலியும் தோற்கடிக்கப்பட்ட பொழுது, அவர்களுடன் கூட்டுச் சேர்ந்திருந்த யப்பானிய ஏகாதிபத்தியமும் தோற்கடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தேசியவாதி சுகார்னோ இந்தோனேசியாவின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்ததுடன், நாட்டின் முதலாவது ஜனாதிபதியாகவும் பதவி ஏற்றுக்கொண்டார்.

***வை.அகமது***

தேசியவாதியான சுகார்னோ தீவிரமான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தார். அமெரிக்க உதவிகளை நிராகரித்த சுகார்னோ, சோசலிச நாடுகளான சோவியத் யூனியனுடனும் சீனாவுடனும் அதிக நட்புப் பூண்டார். அவரது ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கை காரணமாகவே 1955 இல் இந்தோனேசியாவின் பாண்டுங் நகரில் ஆசிய – ஆபிரிக்க நாடுகளின் உச்சி மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டிலேயே இந்தியாவும் சீனாவும் (பிரதமர்கள் நேருவும் சௌ என்லாயும்) சேர்ந்து நாடுகளுக்கிடையிலான உறவுகளுக்கென 'பஞ்சசீலக் கொள்கை'யை வகுத்தார்கள். (இந்த மாநாடே பின்னர் 1961 இல் கூட்டுச்சேரா அமைப்பு உருவாக வழிவகுத்தது) இது தவிர, ஆசிய – ஆபிரிக்க நாடுகள் பங்குபற்றிய மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வும் சுகர்ணோவின் காலத்திலேயே இந்தோனேசியாவில் நடைபெற்றது.

ஜனாதிபதி சுகர்னோவின் கொள்கைகளும் நடவடிக்கைகளும் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் மிகுந்த எரிச்சலையும் ஆத்திரத்தையும் ஊட்டி வந்தது. அவர்கள் சுகர்ணோவின் அரசைக் கவிழ்த்து இந்தோனேசியாவில் தமக்கு இசைவான ஒரு ஆட்சியை ஏற்படுத்துவதற்குத் தருணம் பார்த்துக் காத்திருந்தனர்.

இதே வேளையில் இந்தோனேசிய அரசியலில் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தீர்க்கமான சக்தியாக வளர்ந்து கொண்டிருந்தது. இக்கட்சி 1914 ஆம் ஆண்டு மே 23ந் திகதி தொடங்கப்பட்டது. இக்கட்சி 'பி.கே.ஐய்' (Partai Komunis Indonesia, PKI) என்று சுருக்கமாக அறியப்பட்டது. நெதர்லாந்து கம்யூனிஸ்ட்டுகளே இக்கட்சியின் சிருஸ்டிகர்த்தாக்களாகும். ஒரு கட்டத்தில் இந்தக் கட்சியில் நெதர்லாந்துக்காரர்களே அதிகளவில் உறுப்பினர்களாகவும் இருந்துள்ளார்கள். இருப்பினும் இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி காலத்துக்காலம் எதிரிகளால் பல அழிவுகளுக்கும் உள்ளாகி வந்துள்ளது. இறுதியாக ஐடிட் (D.N.Aidit) என்பவர் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயல்பட்டு வந்தார்.

இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சிதான் சோசலிச நாடுகளுக்கு வெளியே முதலாளித்துவ நாடுகளில் இருந்த (சனத்தொகை கூடிய இந்தியாவின் கம்யூனிஸ்ட் கட்சியையும் விட) மிகப்பெரிய கம்யூனிஸ்ட் கட்சியாகும். பல இலட்சம் பேர் கட்சியின் உறுப்பினர்களாக இருந்தார்கள். 'சொப்சி' என அழைக்கப்படும் கட்சியின் தலைமையிலான தொழிற்சங்கத்தில் கோடிக்கும் மேல் உறுப்பினர்கள் இருந்தார்கள். தவிர, பலம் வாய்ந்த விவசாயிகள், வாலிபர், மாணவர், மாதர், கலை இலக்கிய அமைப்புகளும் இருந்தன.

இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சி ஒவ்வொரு மாகாணத்திலும்



D.N. Aidit

மார்க்சியத்தைக் கற்பிப்பதற்கென பாடசாலைகளை நடத்தி வந்ததுடன், தலைநகர் ஜகார்த்தாவில் மார்க்சிய பல்கலைக்கழகம் ஒன்றையும் நடத்தி வந்தது. இந்தோனேசியாவில் ஆகக்கூடுதலாக விற்பனையாகும் தினசரிப் பத்திரிகையாக இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையே இருந்தது.

அரச நிர்வாகங்களிலும், படைத்துறைகளிலும் இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு கணிசமான செல்வாக்கு இருந்தது. வெளிநாட்டு அமைச்சர் டாக்டர் சுபாந்திரியோ, இராணுவத் தளபதி உண்டுங் போன்றவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் அனுதாபிகளாக இருந்தனர்.

இந்தோனேசியாவின் 10 கோடி சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் ஏதோ ஒருவகையில் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்புடன் தொடர்புள்ளவர்களாக இருந்தனர். ஜனாதிபதி சுகர்னோவின் அரசாங்கம் கம்யூனிஸட்டுகளுக்குச் சார்பாக இருப்பதும், கம்யூனிஸ்ட் கட்சிக்கு மக்கள் மத்தியில் அபரிமிதமான செல்வாக்கு இருப்பதும், இந்தோனேசியா விரைவில் ஒரு சோசலிச நாடாக மாறி விடுமோ என்ற அச்சத்தை அமெரிக்கா தலைமையிலான மேற்குலகிற்கு ஏற்படுத்தியது. எனவே அவர்கள் விடயத்தில் முந்திக் கொள்வது என முடிவெடுத்துவிட்டார்கள்.

இந்தோனேசியாவில் இராணுவச் சதி ஒன்றின் மூலம் சுகார்னோவின் ஆட்சியைக் கவிழ்ப்பது எனத் திட்டவட்டமாகத் தீர்மானித்த அமெரிக்க சீ.ஐ.ஏ., அதற்கு இராணுவத்தில் இருந்த வலதுசாரி ஜெனரலான சுகார்ட்டோவைப் பயன்படுத்தும் முடிவை எடுத்தது. ஏற்கெனவே இராணுவத்தில் வலதுசாரி அணி, இடதுசாரி அணி என்ற பிளவு இருந்ததால், அவர்களுக்கு வலதுசாரி அணிக்குத் தலைமைதாங்கிய சுகார்ட்டோவைப் பயன்படுத்துவது இலகுவாகப் போய்விட்டது.

1965 ஆம் ஆண்டு செப்டம்பர் 30ந் திகதி அன்று கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் நடந்த மிகப்பெரிய மக்கள் பேரெழுச்சியில் இந்தோனேசியா தலைநகரம் ஜகார்த்தா கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. “கம்யூனிஸ்ட்டுகள் ஜனாதிபதி சுகர்னோவைக் கொன்றுவிட்டு ஆட்சியைக் கைப்பற்றப் போகிறார்கள்” என்ற பிரச்சாரத்துடனேயே வலதுசாரிகள் 1965 செப்ரெம்பர் 30 ஆம் திகதி தமது எதிர்ப்புரட்சி இராணுவச் சதியை அரங்கேற்ற ஆரம்பித்தார்கள். முதலில் அவர்கள் கம்யூனிஸ்ட்டுகளிடமிருந்து ஜனாதிபதி சுகர்னோவைப் பாதுகாக்கின்றோம் எனச் சொல்லிக் கொண்டு அவரைத் தமது காவலில் வைத்தார்கள். பின்னர் இராணுவத்தில் இருந்த இடதுசாரிப் போக்குடைய 6 ஜெனரல்களைக் கொலை செய்துவிட்டு அந்தக் கொலைக்கான பழியை கம்யூனிஸ்ட்டுகள் மேல் போட்டார்கள்.

அதைத் தொடர்ந்து நாடு முழுவதுமிருந்த கம்யூனிஸ்ட் கட்சியினதும், அதன் வெகுஜன அமைப்புகளினதும் அலுவலகங்களைத் தாக்கிச் சூறையாடி அங்கிருந்தவர்களைக் கொலை செய்தார்கள். அதன் பின்னர் நாடு முழுவதும் தேடித்தேடி கம்யூனிஸ்ட்டுகள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் அனைவரையும் சுட்டும் வெட்டியும் கொலை செய்தார்கள். இவ்வாறு சுமார் 5 இலட்சம் பேரை இராணுவமும் இராணுவக் குண்டர்களும் சேர்ந்து கொலை செய்ததாக பிற்காலத்தைய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. சம்பவங்களை நேரில் பார்த்தவர்கள் தலைநகர் ஜகார்த்தாவிலும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் கொலை செய்யப்பட்டவர்களின் ஆயிரக்கணக்கான உடல்களை வீதிகளிலும், சாக்கடைக் கால்வாய்களிலும் பிற இடங்களிலும் கண்டதாகக் கூறியிருக்கின்றனர்.

கொலை செய்யப்பட்ட முக்கியஸ்தர்களில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஐடிட், இராணுவத் தளபதி உண்டுங், வெளிவிவகார அமைச்சர் சுபாந்திரியோ, தொழிற்சங்கத் தலைவர் ஜோனோ மற்றும் பல அமைச்சர்கள், அரச – இராணுவ அதிகாரிகளும் அடங்குவர். இவர்களில் கம்யூனிஸ்ட் கட்சித் தொழிற்சங்க அமைப்பான ‘சொப்சி’யின் உப தலைவர்களில் ஒருவரான சுக்ரி என்பவர் புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கமான இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்பு சென்றிருந்தபடியால் உயிர் தப்பினார். அவர் பின்னர் கொழும்பிலிருந்து சீனா சென்று தனது எஞ்சிய காலத்தை சீனாவிலோ, அல்பேனியாவிலோ கழித்ததாகத் தெரிய வருகிறது.

இந்தோனேசியாவில் இந்த இராணுவச் சதியும், பேரழிவுகளும் நடைபெற்ற வேளையில் இலங்கையின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ்.டி.பண்டாரநாயக்க இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் இருந்ததால் அங்கு நடைபெற்ற சம்பவங்களை ஓரளவு நேரடியாகப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்தோனேசியத் தலைநகரில் நடைபெற்ற சர்வதேசப் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அவர் அங்கு சென்றிருந்தார். அவர் இலங்கை திரும்பியதும் “1965 செப்ரெம்பர் 30 சம்பவங்கள்” என்ற தலைப்பில் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பாடு செய்த கருத்தரங்குகளில் கலந்து கொண்டு இந்தோனேசியாவில் நடைபெற்ற இராணுவச் சதி பற்றிய உண்மைகளை எடுத்துரைத்தார்.

இந்தோனேசியாவில் இராணுவச் சதி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவ சர்வாதிகாரி சுகார்ட்டோ 1967 முதல் 1998 வரை 31 வருடங்கள் எதேச்சாதிகார ஆட்சியை நடத்தினான். அவனது ஆட்சிக்கு அமெரிக்கா முழுமையான ஆதரவை வழங்கியது. பல வருடங்கள் கழித்து ஒரு போலி விசாரணையை அவன் மீது இந்தோனேசிய அரசு நடத்தியது. அந்தக் காலகட்டத்தில் அவனை அரசாங்கம் சிறையில் சகல வசதிகளுடனும் பாதுகாத்து வைத்திருந்தது. அதுகூட அவன் வெளியில் இருந்தால் யாராவது தீங்கு செய்துவிடக்கூடாது என்று கருதியே அரசு சிறையில் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என பலரும் கருதினர்.

இந்தோனேசியாவில் அமெரிக்க சீ.ஐ.ஏ. நடத்திய இராணுவச் சதி நடவடிக்கையில் பிரித்தானியாவின் அரச உளவு அமைப்பும் பங்குபற்றி இருந்ததாக பிற்காலத்தில் வெளிவந்த சில இரகசிய ஆவணங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

# கருந்துளைகளே மர்மமான இருண்ட ஆற்றலின் ஆதாரம்



**க**ருந்துளைகள்... இந்த பிரபஞ்சம் தோன்றியதிலிருந்து புதிராக இருந்து வரும் கருத்தாக்கம். ஆனால், கருந்துளைகளுடன் மற்றுமொரு மர்மபொருள் நமது அண்டவெளியில் படர்ந்து உள்ளது. அதுதான் இருண்ட ஆற்றல் (dark energy).

ஒரு பொருளின் மீது பட்டு திரும்புகிற ஒளியைக்கொண்டே நாம் அந்தப்பொருள் இருப்பதை அறிகிறோம். ஆனால் கருந்துளைகள் ஒளியைக்கூட இழுத்துக்கொள்ளும் அளவுக்கு அதிக ஈர்ப்பு விசை கொண்டிருக்கின்றன. ஆகவே கருந்துளைகளை நேரடியாக கண்டுணர முடியாது. ஆனால் அதிகபட்ச ஈர்ப்பு விசை கொண்ட கருந்துளை அருகே இருக்கும் நட்சத்திரங்கள் மற்றும் வாயுக்களின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தையும், அதனால் என்ன மாதிரியான விளைவுகள் நடக்கும் என்பதையும் விஞ்ஞானிகள் அறிவார்கள். அப்படிதான் கருந்துளைகளை அறிகிறார்கள்.

1916 ஆம் ஆண்டில்தான் அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் (Albert Einstein) இந்த பிரபஞ்சத்தில் விசித்திரமான கண்ணுக்கு அகப்படாத படலம் ஒன்று உள்ளது என்றார். ஐன்ஸ்ரைனுக்கு முன்னே விஞ்ஞானிகள் கருந்துளை குறித்து கூறி இருக்காலாம். எனினும், ஐன்ஸ்ரைன் அக்காலத்தில் பிரபலமாக இருந்ததால் அவரது கருத்து பொதுவெளியில் தீவிரத்தை ஏற்படுத்தியது. அதனை தொடர்ந்து அக்கண்ணுக்கு தெரியாத பொருள் குறித்து ஆராய்ச்சிகள் தொடர்ந்தன. 1967 ஆம் ஆண்டில் அமெரிக்க வானியல் ஆய்வாளர் ஜோன் வீலர் (John Wheeler) அக்கண்ணுக்கு தெரியாத படலத்துக்கு கருந்துளை (black hole) என்று பெயர் வைத்தார். முதல் கருந்துளை 1971 இல் கண்டறியப்பட்டது.

ஸ்டீபன் ஹாக்கிங் (Stephen Hawking) போன்ற முக்கிய விஞ்ஞானிகள் தொடர்ந்து கருந்துளைகள் குறித்து எழுதியும், பேசியும் வந்தனர். கருந்துளைகளை பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்தாலும் அவை எங்கு, எதிலிருந்து வருகின்றன என்ற விளக்கம் யாராலும் இதுவரை கூறமுடியவில்லை என்பது ஏமாற்றம்தான். எனினும் அறிவியல் அதன் முயற்சியை கைவிடாது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நமது பிரபஞ்சத்தில் நட்சத்திரம், சூரிய குடும்பம், விண்மீன் மண்டலம், என அனைத்தும் வெறும் 5% இடத்தை மட்டுமே கொண்டிருக்கின்றன. இதில் 27% கரும்பொருள்கள் (dark matters) உள்ளன. இவை ஒளியைக் கூட பிரதிபலிக்காத தன்மை கொண்டது. மீதமுள்ள 68% இருண்ட ஆற்றலாக (dark ennergy) உள்ளது. இதில், பிரபஞ்சத்தில் உள்ள கருந்துளைகள் இருண்ட ஆற்றலின் ஆதாரமாக இருக்கலாம் என்பதற்கான புதிய ஆதாரம் 'தி ஆஸ்ட்ரோபிசிகல் ஜேர்னல் லெட்டர்ஸ்' (The Astrophysical Journal Letters) இல் வெளியிடப்பட்ட அறிவியல் கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு ஹவாய் பல்கலைகழகத்தால் (University of Hawaii) ஒன்பது நாடுகளில் உள்ள 17 வானியலாளர்களால் நடத்தப்பட்டுள்ளது. அதில் கருந்துளைகளின் வளர்ச்சியானது பிரபஞ்சத்தின் விரிவாக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்ற முக்கிய கருத்தாக்கத்தை முன்மொழிந்திருக்கிறது.

கருந்துளைகள் வெற்றிட ஆற்றல் (இருண்ட ஆற்றலின் வெளிப்பாடு) என்று அழைக்கப்படும் ஒன்றைக் கொண்டிருக்கலாம் என்ற கருத்து புதியதல்ல, உண்மையில் 1960களில் கோட்பாட்டளவில் இது ஆராய்ச்சியாளர்கள் விவாதிக்கப்பட்டது. ஆனால், அண்டவியல் இணைப்பின் விளைவாக பிரபஞ்சம் விரிவடைவதால், கருத்துளைகள் காலப்போக்கில் அளவில் அதிகரிக்கும் என்பது சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இந்தக் கருந்துளைகள் மூலம் பிரபஞ்சத்தில் உள்ள இருண்ட ஆற்றலை நாம் கணக்கிட முடியும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றன.

**விரைவான விரிவாக்கம்:** நமது பிரபஞ்சம் சுமார் 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெருவெடிப்பில் (big bang theory) தொடங்கியது என்பதை நாம் அறிவோம். இந்த வெடிப்பின் ஆற்றல் பிரபஞ்த்தை வேகமாக விரிவடையச் செய்தது. செய்து கொண்டிருக்கிறது. 1990 வரை நமக்கு ஒரு கதை கூறப்பட்டது. அது பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து பொருட்களிலும் ஈர்ப்பு விசையின் தாக்கம் காரணமாக விரிவாக்கம் படிப்படியாக குறையும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்த்தனர். ஆனால், இது உண்மையல்ல.

நாம் அனைவரும் நினைத்தது போல ஈர்ப்பு விசையால் பிரபஞ்சத்தின் விரிவாக்கம் குறையவில்லை, மாறாக வேகமெடுத்து வருகிறது. இது மிகவும் எதிர்பாராதது. இதனை விளக்கத்தான் விஞ்ஞானிகள் தற்போது சிரம்மப்பட்டு வருகின்றனர்.

**நட்சத்திர வெடிப்புகள்:** சரி, அடுத்ததாக இருண்ட ஆற்றல் என்றால் என்ன? – இது பிரபஞ்சத்தின் அடுத்த புதிர். பொதுவாக வயது முதிர்ந்த நட்சத்திரங்கள் வெடிக்கும்போதுதான் இந்தக் கருந்துளைகள் உருவாகின்றன. கருந்துளையின் ஈர்ப்பு விசை மிகவும் வலிமையானது. ஒளி கூட அதிலிருந்து தப்பிக்க முடியாது. கருந்துளையில் எல்லாமே உறிஞ்சப்படுகிறது. கருந்துளையின் மையத்தில் சிறப்பு

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...**

# அமெரிக்கப் பொருளாதாரத்தை மீறி சீனா வளர்ந்து வருகிறது!

## -முன்னாள் அமெரிக்கத் திறைசேரி அதிகாரி கூறுகிறார்!!



சீனா அமெரிக்க பொருளாதாரத்தை மீறி வளர்ந்து வருவதாகவும், எனவே அமெரிக்கர்கள் மாயையில் இருந்துகொண்டு இது குறித்துத் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது எனவும் ஜனாதிபதி ஒபாமா காலத்தில் அமெரிக்கத் திறைசேரியின் உறுப்பினராக இருந்த Steven Rattner கூறியிருக்கிறார். 'நியுயோர்க் ரைம்ஸ்' (The New york Times) பத்திரிகையில் எழுதிய ஒரு கட்டுரையிலேயே அவர் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

கொவிட் காலத்து சீனாவின் இறுக்கமான கொள்கைகள் பொருளாதாரத்தில் சில பின்னடைவுகளை ஏற்படுத்தியது என்பதை ஏற்றுக்கொள்ளும் ஸ்ரீவன், ஆனால் புதிய உற்பத்திகள் பற்றிய தற்போதைய தரவுகள் சீனாவின் பொருளாதாரம் பற்றி பீதியை உருவாக்குகின்றது எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், 2020 இல் சீனாவின் வளர்ச்சி 14 வீதமாகவும், அமெரிக்காவின் வளர்ச்சி 6 வீதமாகவும் இருந்தது எனக் குறிப்பிடும் அவர், ஆனால் தற்பொழுது 1.6 வீதமாக இருக்கும் அமெரிக்காவின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் சீனாவின் வளர்ச்சி 5.2 வீதமாக இருக்கும் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

"மேற்கத்தைய ஊடகங்கள் சீனா பற்றிச் சந்தேகம் காட்டுவதை அதிகரித்து வருகின்றன. ஆனால் நான் சீனா தொடர்ந்து செழிப்பை நோக்கி முன்னேறி வருகிறது எனக் கருதுகிறேன். எமது மிகப்பெரும் தந்திரோபாய போட்டியாளர் என்ற வகையில், சீனாவின் தொடர்ச்சியான செழிப்பை நோக்கிய வளர்ச்சி, தென் சீனக்கடல் முதல் உளவு பலூன் வரையும் மற்றும் நீதியற்ற வர்த்தக நடைமுறைகள் பற்றியும் எமது கவனத்தை ஈர்த்து வருகின்றன" எனவும் அவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சீனா நிச்சயமாக பெரும் சவால்களை எதிர்நோக்குகிறது எனக் குறிப்பிடும் ஸ்ரீவன், அவையாவன வர்த்தகங்களை அரசாங்கம் கையாள்வது மற்றும் 20.4 வீதமான இளைஞர்களின் வேலைவாய்ப்பு என்பனவாகும் எனவும் குறிப்பிடுகிறார்.

ட்ரம்ப் மற்றும் பைடன் நிர்வாகங்களால் சீனா மீது ஏற்படுத்தப்பட்ட வர்த்தகத் தடைகள் சீனாவின் தொழில்நுட்ப வளர்ச்சியில் சில பின்னடைவுகளை ஏற்படுத்தியது எனினும், "அமெரிக்கா கட்டாயமாகத் தனது சொந்த வீட்டை ஒழுங்குபடுத்துவது முதலில் அவசியம்" எனவும் கூறியுள்ளார்.

சீனா அமெரிக்காவை விட வேகமாக வளர்கின்றது என்பதை எமக்கு நிரூபித்துக் காட்டியுள்ளது. அமெரிக்காவைப் பொறுத்தவரை, அதன் வரவு செலவுத் திட்டத்தில் உள்ள மிகப்பெரும் பற்றாக்குறையும், தொழில் வளர்ச்சிக்குப் பாதகமான சட்டங்களுமே அதன் வளர்ச்சிக்குத் தடை எனவும் அவர் தனது கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

---

**12 ம் பக்கத்தொடர்ச்சி...**

தனித்தன்மை என்று அழைக்கப்படும் ஒரு குறிப்பிட்ட இடத்தை விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். அங்கு கருந்துளையின் உட்செல்லும் பொருள் எல்லையற்ற அடர்த்தியில் ஒரு புள்ளியில் நசுக்கப்படுகிறது என்று கூறலாம். மிக அருகில் வரும் நட்சத்திரங்களை விழுங்குவதன் மூலமோ அல்லது மற்ற கருந்துளைகளுடன் இணைவதன் மூலமோ கருந்துளையின் அளவு அதிகரிக்கின்றன.

ஆனால், கடந்த காலத்திலும் சரி, இன்றைய காலத்திலும் சரி, நட்சத்திர உருவாக்கம் இல்லாத நீள்வட்ட விண்மீன் திரள்களை ஒப்பிட்டபோது, இறந்த விண்மீன் திரள்கள் அவற்றின் எரிபொருளை முழுவதுமாகப் பயன்படுத்திவிடுகின்றன. எனவே, இந்த நேரத்தில் அதிலிருந்து உருவாகும் கருந்துளைகள் விண்மீன்களை விழுங்கும்போது அவற்றின் நிறை அதிகரிப்பது இங்கு சாத்தியமில்லை.

அதற்கு பதிலாக, இந்த கருந்துளைகள் அங்கு வெற்றிட ஆற்றலைக் கொண்டிருப்பதாகவும், பிரபஞ்சம் விரிவடையும்போது இந்தக் கருந்துளைகளும் விரிவடைவதாக ஹவாய் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த இணைத்தல் செயல்முறைக்கு பிரபஞ்சத்தில் உள்ள இருண்ட ஆற்றல் எவ்வளவு காரணமாக உள்ளது என்பதையும் ஹவாய் விஞ்ஞானக் குழு கணக்கிட்டுள்ளது. மேலும், இருண்ட ஆற்றலைக் கணக்கிடுவதற்கு தேவைப்படும், வெற்றிட ஆற்றலை கருந்துளைகள் வழங்குவது சாத்தியமாகும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இக்கருத்து பிரபஞ்சத்தில் இருண்ட ஆற்றலின் தோற்றத்தை விளக்குவதோடு மட்டுமல்லாமல், கருந்துளைகள் மற்றும் பிரபஞ்சத்தில் அவற்றின் பங்கைப் பற்றிய நமது புரிதலை ஆழமாக மறுபரிசீலனை செய்ய வைத்துள்ளது. இக்கருத்தினை உறுதிப்படுத்த இன்னும் நிறைய வேலை செய்ய வேண்டும்.

**முன்பக்கத்தொடர்ச்சி...**

வெவ்வேறு அளவுகளில் பின்பற்றி வந்துள்ளன. 1956 இல் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்க இலங்கையின் தேசிய சுதந்திரம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு என்பனவற்றைப் பாதுகாக்க பல நடவடிக்கைகளை எடுத்தாராயினும், 'சிங்களம் மட்டும்' என்ற சட்டத்தைக் கொண்டு வந்ததின் மூலம் அவரும் சிங்களப் பேரினவாதக் கொள்கையையே பின்பற்றினார். அதன் மூலம் தமிழ் இனவாத அரசியல் சக்திகள் மொழியை வைத்து இலகுவான முறையில் அரசியல் செய்வதற்கான வாய்ப்பை உருவாக்கிவிட்டுப் போனார்.

அன்றிலிருந்து இன்றுவரை சிங்கள – தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் இனவாதத்தையே தமது ஆயுதமாகப் பயன்படுத்தி அரசியலில் கோலோச்சி வருகின்றனர். அதன் காரணமாக சிங்கள – தமிழ் மக்களிடையே இன ஒற்றுமையை, மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை, இன மத வேறுபாடுகளுக்கு அப்பால் வர்க்க ஒற்றுமையை வலியுறுத்திய சக்திகளின் கரங்கள் பலமிழந்து போயின.

இந்த நிலைமையில இடதுசாரிக் கட்சிகள் ஆரம்பம் முதல் இன ஒற்றுமையை வலியுறுத்தி வந்ததுடன், இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்தன. இலங்கையின் மூத்த இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழர்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தது. அதேபோல, இன்னொரு இடதுசாரிக் கட்சியான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பிராந்திய சுயாட்சி வழங்கப்பட வேண்டும் எனக் கோரி வந்தது. இலங்கையின் ஏனைய இடதுசாரிக் குழுக்களும் ஏறத்தாழ இதே கருத்தையே கொண்டிருந்தன. பண்டாரநாயக்க அரசு கொண்டு வந்த சிங்களம் மட்டும் சட்டத்தையும் இந்தக் கட்சிகள் கடுமையாக எதிர்த்து பாராளுமன்றத்தில் வாக்களித்தன. (ஜே.வி.பி. ஒரு சிங்கள இனவாதக் கட்சி என்றபடியால் அதை நாம் ஒரு இடதுசாரிக் கட்சியாக இங்கு எடுத்துக் கொள்ள முடியாது)

இடதுசாரிக்கட்சிகள் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்காகவும், மலையகத்தில் வாழ்கின்ற தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்காகவும் குரலெழுப்பி பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்த போதிலும், இவ்விரு பகுதி தமிழ் மக்களும் இனவாத சக்திகளால் கவர்ந்திழுக்கப்பட்டு, அதன் காரணமாக இடதுசாரிகளுக்கு ஆதரவு வழங்க முன்வரவில்லை. இந்த நிலைமை இடதுசாரிக் கட்சிகளை தவறான நிலைப்பாட்டை எடுப்பதற்கு தூண்டுவதில் போய் முடிந்தது.

முதலில் லங்கா சமசமாஜக் கட்சி 1964 இல் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இணைந்து கொண்டது. பின்னர் 1970 இல் கம்யூனிஸ்ட் கட்சியும் சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தில் இணைந்து கொண்டது. அத்துடன் அவர்கள் முன்னைய காலங்களில் வலியுறுத்தி வந்த இனப்பிரச்சினை சம்பந்தமான தீர்வுக் கொள்கைகளையும் கைவிட்டுவிட்டனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசுகள் மேற்கொண்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை இந்த இடதுசாரிக் கட்சிகள் வெளியிலிருந்து ஆதரிப்பதற்குப் பதிலாக, அந்த அரசின் அங்கமாகவே மாறியது இவர்களை ஆதரித்த தொழிலாளி வர்க்கத்தினருக்கும், சிறுபான்மை தேசிய இனங்களுக்கும் இவர்கள் மேல் அவநம்பிக்கையை ஏற்படுத்தியது.

இன்னொருபுறத்தில் முதலாளித்துவப் பாராளுமன்றப் பாதையை நிராகரித்து, புரட்சிப் பாதையை வலியுறுத்தி வந்த நா.சண்முகதாசன் தலைமையிலான புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி இனப்பிரச்சினை விடயத்தில் சரியான ஒரு சோசலிசக் கொள்கையைப் பின்பற்றும் என்ற எதிர்பார்ப்பு பலருக்கும் இருந்தது. ஆனால் அக்கட்சியின் பொதுச்செயலாளர் சண்முகதாசன் இலங்கைத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் அல்ல என்ற வரட்டுத்தனமான இடதுசாரித் தீவிரவாதக் கொள்கையை விடாப்பிடியாக வலியுறுத்தி நின்றதன் காரணமாக அந்தக் கட்சியாலும் இனப்பிரச்சினை சம்பந்தமாக தீர்க்கமான நடவடிக்கை எதனையும் எடுக்க முடியாமல் போய்விட்டது. (தனது அந்திம காலத்தில் சண்முகதாசன் 180 பாகை பல்டியத்து பாசிசப் புலிகளை ஆதரிக்கும் அரசியல் வங்குரோத்து நிலைக்கும் சென்றது சந்தர்ப்பவாதத்தின் இன்னொரு பக்கம்)

இந்த நிலைமைகளால் சண்முகதாசனின் கட்சியை விட்டுப் பிரிந்து புதிதாக மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் ஒரு கட்சியை உருவாக்கியவர்கள் இனப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதை தமது வேலைத்திட்டத்தின் முக்கிய அம்சமாக வைத்தனர். அது மட்டுமின்றி, இனப்பிரச்சினையைத் தனியாகக் கையாள்வதற்காக 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' என்ற அமைப்பொன்றையும் உருவாக்கினர். ஆனால் புறச் சூழ்நிலைகள் வேகமாக மாறி, தமிழீழம் என்ற தனிநாடு கோரிக்கை வலுப்பெற்றதால் அவர்களது முயற்சிகள் காலம் தாழ்ந்தவையாய் பயனற்றுப் போயின.

இடதுசாரிகள் விட்ட இந்தத் தவறுகளாலும், தமிழ் முதலாளித்துவக் கட்சிகளின் கையாலாகாத்தனத்தாலும் ஏற்பட்ட அரசியல் இடைவெளியையே பின்னர் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் நிரப்பிக் கொண்டன. அவர்களது நடவடிக்கைகள் சுமார் 30 வருட காலம் நீடித்து நாட்டுக்கும், குறிப்பாகத் தமிழ் மக்களுக்கும் ஏற்படுத்திய அழிவுகள் சொல்லுந்தரமன்று.

இந்த ஆயுதப் போராட்ட இயக்கங்களின் அழிவு, குறிப்பாக புலிகள் இயக்கத்தின் அழிவு, தமிழ் அரசியலில் மீண்டுமொரு இடைவெளியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த இடைவெளியை வழக்கம் போல தமிழ் முதலாளித்துவ அரசியல் சக்திகள் (குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு) நிரப்புவதற்கு ஒருபக்கத்தில் முயன்று வருகின்றன. தமிழ் மக்களுக்கு இவர்கள் மேல் பெருமளவுக்கு நம்பிக்கை இல்லையென்ற போதிலும், இவர்களை விட மற்றவர்கள் மேலும் மோசமானவர்கள் என்ற கருத்தில் தேர்தல்களில் இவர்களை ஆதரித்து வாக்களித்து வருகின்றனர்.

மறுபக்கத்தில், இந்த அரசியல் இடைவெளியை தமது ஆதரவு சக்திகள் மூலம் நிரப்புவதற்கு அந்நிய சக்திகள் சிலவும், இலங்கை அரசும் கூட முயற்சித்து வருகின்றன. அதற்காக அவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் இனவாத, மதவாத, சாதிவாத முரண்பாடுகளை ஒரு கருவியாகப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளன. இதன் காரணமாக தமிழினம் ஒரு இனம் என்ற தேசிய இனக் கட்டுக்கோப்பிலிருந்து சிதைந்து போகும் அபாயமும் உருவாகியுள்ளது.

இப்படியான ஒரு சூழ்நிலையில் இந்தப் பிரச்சினையில், அதாவது தேசிய இனப்பிரச்சினையில் உண்மையான இடதுசாரிச் சக்திகளின் பணியும்

பங்களிப்பும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆனால் பலருக்கு அந்தப் பணியை எங்கிருந்து தொடங்குவது என்ற ஒரு குழப்பம் அல்லது கேள்வி இருக்கின்றது. அதற்குக் காரணமும் இருக்கின்றது.

முதலாவது தெற்கிலுள்ள இடதுசாரிக் கட்சிகள் மீது தமிழ் மக்களுக்குத் துளியும் நம்பிக்கை கிடையாது. அத்துடன் அவர்களுக்கு இன்று தெற்கில் எவ்வித செல்வாக்கும் கூடக் கிடையாது. மறுபக்கத்தில் தமிழ் மக்கள் மத்தியிலும் உருப்படியான இடதுசாரி இயக்கம் எதுவும் கிடையாது. இருக்கின்ற சில குழுக்களும் பிற்போக்குத் தமிழ் தேசியவாதத்துடன் இழுபட்டுச் செல்பவையாக இருக்கின்றன.

எனவே, இன்றுள்ள சூழ்நிலையில் முதலாளித்துவப் பாராளுமன்றவாதப் பாதையில் செல்லாது, அதற்கு வெளியே தமிழ் மக்களின் பலத்தை அணிதிரட்டக்கூடிய ஓர் அமைப்பை தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்குவதுதான் இந்தப் பிரச்சினையைக் கையாள்வதற்கான ஒரு வழி. அத்தகைய ஓர் அமைப்பு இனவாத அடிப்படையைக் கொண்டிருக்காது சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முற்போக்கு சக்திகள் உட்பட இலங்கையின் அனைத்து இனங்களிலுமுள்ள முற்போக்கு சக்திகளையும் தமிழ் மக்களின் பிரச்சினையின் பால் ஈர்க்கக்கூடிய கொள்கைகளையும் அணுகுமுறையையும் கொண்டிருக்க வேண்டும். அதேபோல, சர்வதேச அரங்கிலும் முற்போக்கு சக்திகளின் ஆதரவைப் பெற முயற்சிக்க வேண்டும்.

வரலாறு மீண்டுமொருமுறை இலங்கை (குறிப்பாகத் தமிழ்) இடதுசாரிகளுக்கு ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளது. இந்தத் தடவையாவது சமயோசிதத்துடன் பற்றிப் பிடிப்பார்களா?

# உலக வெப்பமாதல் முதல்முறையாக 1.5 செல்சியஸ் வரம்பை மீற வாய்ப்பு



அடுத்த சில ஆண்டுகளில் உலக வெப்பநிலை அதிகரிப்பதற்கான முக்கிய வெப்பநிலை வரம்பு உடைக்கப்பட வாய்ப்பு உள்ளதாக விஞ்ஞானிகள் எதிர்வுகூறியுள்ளனர்.

தற்போதில் இருந்து 2027 ஆம் ஆண்டுக்கு இடையே 1.5 பாகை செல்சியஸ் (celsius) உலக வெப்பமாதல் வரம்பை கடப்பதற்கு 66 வீத வாய்ப்பு இருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த கோடை காலத்தில் எதிர்பார்க்கப்படும் 'எல் நினோ' (El Niño) காலநிலை நிகழ்வுடன் மனித செயற்பாடுகளால் வெளியிடப்படும் பசுமையில்ல வாயு உமிழ்வுகள் காரணமாகவே வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

உலகம் இந்த வரம்பை கடந்தாலும் அது தற்காலிகமானதாக இருக்கக் கூடும் என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வரம்பு எட்டப்பட்டால், தொழில்மயமாக்கலில் இருந்து புதைபடிவ எரிபொருள் வெளியேற்றம் உண்மையில் அதிகரிக்க ஆரம்பிப்பதற்கு முன்னர், 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் இருந்ததை விட உலகம் 1.5 பாகை செல்சியஸ் வெப்பமாக இருக்கும்.

சர்வதேச பருவநிலை பேச்சுவார்த்தைகளில் 1.5 பாகை செல்சியஸ் ஓர் எச்சரிக்கை அடையாளமாக உள்ளது. 2015 பாரிஸ் உடன்படிக்கையின் கீழ் உலக வெப்பநிலை 1.5 செல்சியஸ் வரம்புக்கு மட்டுப்படுத்த உலக நாடுகள் இணங்கின.

1.5 செல்சியஸுக்கு மேல் வெப்பநிலை செல்வது ஒன்று அல்லது இரண்டு தசாப்தங்களில் நீண்ட வெப்ப அலை, மேலும் தீவிரம் கொண்ட புயல்கள் மற்றும் காட்டுத் தீ சம்பவங்கள் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டது.

எனினும் இந்த வெப்பநிலை வரம்பு மீறப்பட்டபோதும் அது பாரிஸ் கட்டுப்பாட்டை மீறுவதாக அமையாது. உமிழ்வுகளை விரைவாக குறைப்பதன் மூலம் உலக வெப்பமாதலை கட்டுப்படுத்த இன்னும் வாய்ப்பு இருப்பதாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

எந்த ஓர் ஆண்டிலும் 1.5 செல்சியஸ் வரம்பை மீற வாய்ப்பு இருப்பதாக 2020 தொடக்க உலக காலநிலை அமைப்பு மதிப்பீடு செய்து வருகிறது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் 1.5 பாகை வரம்பை மீற 20 வீதத்துக்கும் குறைவான வாய்ப்பே இருப்பதாக அவர்கள் கணித்துள்ளனர்.

எனினும் கடந்த ஆண்டு அது 50 வீதமாக அதிகரித்ததோடு தற்போது அது 60 வீதமாக உயர்ந்துள்ள நிலையில் முன்னரை விட வெப்பமாதல் வரம்பு மீறப்படுவதற்கு அதிக வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

புவி வெப்பமடைதல் காரணமாக அதிக அளவு நீர் கடலில் இருந்தும், நிலத்தில் உள்ள நீர் நிலைகளில் இருந்தும் ஆவியாகிறது. இதனால் இந்த நீரானது நீராவியாக மாறி வளிமண்டலத்தில் சென்று சேருகிறது. இது முன்பு இயற்கையாக நடந்த நிகழ்வைக் காட்டிலும், புவி வெப்பமயமாதல் காரணமாக அதிகமானளவு நீராவியை உற்பத்தி செய்து உள்ளது. இதன் காரணமாக மழைப்பொழிவின்போது இந்த நீராவி அனைத்தும் நீராக மாறி புவியில் வந்து சேருகிறது. இது முன்பு சாதாரணமாக பெய்த மழை அளவைக் காட்டிலும் அதிகமான மழை பொழிவை பூமிக்கு தருகிறது. இதனால்தான் உலகம் முழுவதும் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது.

# நேட்டோவின் நடவடிக்கைகள் பெரும் ஆபத்திற்கான முன்னறிவிப்பு




**ஆ**சிய பசிபிக் பகுதியில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளின் நடவடிக்கைகள் ஆபத்திற்கான அறிகுறிகளாகத் தெரிகின்றன என்று ‘சிஜிரிஎன்’ (CGTN) என்ற ஊடகம் நடத்திய ஆய்வில் தெரிய வந்திருக்கிறது. இந்த ஆய்வை மேற்கொண்டபோது, அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய இராணுவக் கூட்டணி என்று பலரும் நேட்டோ பற்றிக் கருத்து சொல்லியிருக்கிறார்கள். ஆசிய – பசிபிக் பகுதிகளில் இந்த இராணுவக் கூட்டணி எந்தவித நட வடிக்கைகளிலும் ஈடுபடுவதை ஆய்வில் பங்கேற்ற 90 விழுக்காட்டினர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். தங்களின் நடவடிக்கைகளுக்கு அவர்கள் எத்தகைய காரணங்களை சொல்லி வந்தார்களோ, அவைகள் அனைத்தும் தற்போதைய நடவடிக்கைகளுக்கு பொருந்தவே இல்லை என்று 93 விழுக்காட்டினர் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளாகவே, சர்வதேச அளவில் எழும் பிரச்சனைகளில் அமெரிக்காவின் முடிவையே அதன் கூட்டாளிகள் தங்கள் முடிவாகவும் அறிவித்து வந்திருக்கிறார்கள்.

உக்ரைன் நெருக்கடியிலும் அப்படிப்பட்ட நிலைபாட்டையே எடுத்துள்ளனர். தங்கள் நாட்டுப் பொருளாதாரம் மற்றும் நாட்டு மக்களுக்கு நெருக்கடி என்பதைக் கூடப் பொருட்படுத்தாமல் உக்ரைனுக்கு ஆதரவாக ரஷ்யா மீது பல்வேறு தடைகளைப் போட்டிருக்கிறார்கள். அடுத்த கட்டமாக ஆசிய – பசிபிக் பகுதிகளிலும் அமெரிக்கா சொல்லும் பணிகளைச் செய்ய நேட்டோ கூட்டாளிகள் தயாராகி வருகிறார்கள். இதில் முதல் கட்டமாக, ஜப்பானில் நேட்டோ அலுவலகம் ஒன்றைத் திறக்கப் போகிறார்கள். இந்தத் தகவலை அந்நாட்டின் பிரதமர் ஃபுமியோ கிஷிடா தெரிவித்த பிறகுதான் மக்கள் மத்தியில் ஆய்வு நடத்தப்பட்டது. அவரது அறிவிப்பு பெரும் கவலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. ஜப்பானில் மட்டுமல்ல, ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில் உள்ள பல்வேறு நாடுகளில் இதன் தாக்கம் இருந்தது. இத்தகைய செயல்பாடுகள் இந்தப் பகுதியின் அமைதியைக் குலைத்துவிடும் என்ற கருத்து எழுந்தது. நேட்டோ இராணுவக் கூட்டணியின் பிரதிநிதிக் குழு ஒன்று ஜப்பானுக்கு வந்தது. கூட்டணிக்கும், ஜப்பானுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகப்படுத்துவதற்கான வழிகளை ஆய்வு செய்திருக்கிறார்கள். அதில்தான் டோக்கியோவில் ஒரு அலுவலகத்தைத் திறப்பது தொடர்பாகப் பேசியுள்ளனர். அடுத்த ஆண்டில் இந்த அலுவலகத்தைத் திறக்கலாம் என்ற ஆலோசனையும் முன்வைக்கப்பட்டது. இதை நேட்டோவும், ஜப்பானும் உறுதி செய்துள்ளன. இந்த அலுவலகம் திறக்கப்பட்டால் ஆசிய–பசிபிக் பகுதியில் அமைக்கப்படும் முதல் நேட்டோ அலுவலகமாக இது இருக்கும்.

**சீனா, வடகொரியா எதிர்ப்பு**

சீனாவும், வடகொரியாவும் ஆசிய–பசிபிக் பகுதிகளில் நேட்டோ செயல்படுவதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. வடகொரியாவின் ஜப்பான் ஆய்வு மையத்தின் அலுவலர்களில் ஒருவரான கிம் சியோய்–ஹுவா, “இராணுவக் கூட்டணி ஒன்றை ஆசிய–பசிபிக் பகுதியில் அமைக்க அமெரிக்கா முயற்சிக்கிறது என்று அனைவருக்கும் தெரிந்த இரகசியமாகும். அண்மைக் காலத்தில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோவுக்கும், ஜப்பானுக்கும் இடையில் ஒத்துழைப்பு அதிகரித்திருப்பது கவலை அளிக்கிறது” என்று கூறியுள்ளார். “ஆசிய–பசிபிக் பகுதிக்குள் கிழக்கு நோக்கிய நேட்டோவின் பயணம் பிராந்தியப் பிரச்சனைகளில் தலையீட்டை உருவாக்கும். இது பிராந்திய அமைதியைக் குலைத்துவிடும். இந்தப் பகுதி நாடுகளுக்குள் முகாம்களை உருவாக்கும். இந்தப் பகுதியில் இதுபோன்ற இராணுவக் கூட்டணி அமைவதைத் தங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது” என்று சீனா தெரிவித்துள்ளது.